திராவிட நாடு

29—4—62 | வார வெளியீடு | விலை 16 காசு

மறந்ததுவோ?

—[சுசிலா]—

பாலும், சோறும், தெளிதேனும்
    பாங்காய் நாங்கள் தந்திடுவோம்
நாளும் மக்கள் நலிவினையே
    நயமாய்ப் போக்கி—அவர் வாழ்வில்
சூளும் துன்பம் அனைத்தையுமே
    சுடர்காண் இருள்போல் மாற்றிடுவோம்
ஆளும் திறனைப் பெற்றோரை
    அமைச்சர் அணியில் சேர்த்திடுவோம்-செங்
கோலும், நலமும் தேசத்தில்
    செழித்திடச் செய்ய உழைப்போமே—என்ற
நாளும் காங்கிரஸ் ஆட்சியிலே
    பாரதபுத்திரர் மாட்சியிலே—பசியால்
விழும் மக்கள் ஏராளம்!
    மாய்ந்த சடலம் பலப்பல!!

அறமும், மறமும், வீரமும்
    அன்பும், பாச நேசங்களும்
உறவும், உள்ள எழுச்சிகளும்
    உள்ளம் உருக்கும் நிகழ்ச்சிகளும்
நிறைந்து வாழ்ந்த திராவிடத்தில்
    நிலைகெட்ட வாழ்வு இன்றேனோ?
இறையும், முறையும் இங்கில்லை
    இனிய வாழ்வு இங்கில்லை
வறுமை, தொழுநோய், ஊழலுக்கு
    வாழ்த்துப் பலப்பல இங்குண்டு
சிறுமை வாழ்வு வாழ்கின்றோம்!
    சிந்தித்துச் செயல்பட வேண்டாவோ?
பெருமை படைத்த இனம் இன்று—தன்
    பீடு நடையினை மறந்ததுவோ?

வாழ்க எதிரிகள்

(கனகு)

"அப்பா, அப்பா!"

"ஏண்டா வர்றப்பவே சிணுங்கி வழிஞ்சுக்கிட்டு வர்றே?"

"அந்தக் கோவிந்தன் இல்லேப்பா, கோவிந்தன், அவன் என்னைக் கேலி பண்றானப்பா! — ஏண்டா உன் பேரைத் தறுதலைன்னு வெச்சுக்கலேன்னு கேட்கிறானப்பா! ஆறுமுகம் என்ற பேருக்குத் தனித் தமிழ் தறுதலைதானே என்கிறானப்பா!"

"எந்தக் கோவிந்தன்டா அது? தலைக்கும், மூஞ்சிக்கும் வித்தியாசம் தெரியாத பய! ஏண்டா அவன்தான் தமிழ் தெரியாத காரணத்தினால், ஆறு என்பது தமிழா இல்லையா, அதற்கு வேறு சொல்கூடத் தேவையா என்று அறிஞ்சிக்காமே எதையோ உளறினானன்னா, நீ அதைக் கேட்டுக்கிட்டு, அழுதுகிட்டா வர்றது? நீ எட்டாவது படிக்கிறவன். தாய்ப் பாலோடு தமிழ்ப் பாலையும் சேர்த்துக் குடிச்சவன். அவன் பேசறது ஏடாகூடமுன்னு உனக்குத் தெரியலே?"

"அவன் பதினோராவது படிக்கிறானப்பா! ஆனால் அவன் பேச்சு நாம்பபேசறமாதிரிதமிழ் இல்லேப்பா! இந்தி இருக்குது பாரு இந்தி—அந்த மந்திப் பேச்சுத்தான் அவன் பேசறதிலே ரொம்ப ரொம்பக் கலந்து கிடக்குதுப்பா!"

"ஓகோ, பாவம் — அவன் தமிழ்ப் பிள்ளே இல்லே போலிருக்குது. அதனாலே தமிழைக் கண்டா அவனுக்கு வெறுப்பு வெறுப்பா வருது போலிருக்குது. அப்போ அவன் தமிழாசிரியர்களை யெல்லாங்கூடத் திட்டுவானே?"

"ஐயயோ, அந்த வெட்கக் கேட்டை என்ன கேட்டிங்க. அவன் எங்க பள்ளியிலுள்ள தமிழ் ஆசிரியரை வகுப்பிலேகூட மதிக்கிறது இல்லேப்பா! வழியிலே கண்டா விசில் அடிக்கிறானப்பா!"

"ஆமா, அத்தனை பேரு படிக்கிற பள்ளிக்கூடத்திலே உன்னை மட்டும் ஏன் அவன் தனியாகக் கேலி பண்ணிக்கிட்டுத் திரியறான்?"

"அதுதானப்பா தெரியலே!"

இப்படிச் சிறுவன் ஆறுமுகத்தோடு தந்தை நெடுமாறனார் பேசிக்கொண்டிருக்கும்போது, அங்கே மணவழகன் வந்து சேர்ந்தான். மணவழகன் நெடுமாறனாரின் மூத்த மகன். 'அதுதானப்பா தெரியலே' என்று ஆறுமுகம் சொன்னது மணவழகன் காதிலே விழுந்தது. "என்ன தெரியலே?" என்று தந்தையையும், தம்பியையும் ஒருசேரக் கேட்டுக்கொண்டு அவன் உள்ளே நுழைந்தான்.

"இந்தப் பயலை எவனோ ஒருத்தன் 'ஏண்டா தறுதலைன்னு பேரு வெச்சிக்கலே? தறுதலை என்பதுதான் ஆறுமுகத்துக்குச் சரியான தமிழ் என்று அடிக்கடி சொல்லிக் கேலி பண்ணி இகழ்ச்சி செய்யறானாம். அதை அவன் கேட்டுட்டு வந்து, இங்கே அழுதுகொண்டு நிக்கிறான்.

"யாரவன் அப்படிக் கேலி பண்றவன்?"

"எவனோ கோவிந்தன்னு பேராம்!"

"என்னா, கோவிந்தனா? மெய்யாவா?"

"மெய்தான் அண்ணா!"

"இதே பேரு கொண்டவன் ஒருத்தன் எங்கள் கல்லூரிக்குப் போகும் வழியிலே ஒரு அச்சகத்திலே வேலை பார்க்கிறான். எழுத்துக் கோக்கும் வேலை. வேலை நல்லவேலைதான். ஆனால், அந்த வேலைக்கு அவன் லாயக்கில்லே. அவன் மாதிரி ஒரு பத்துப் பேர் அந்த வேலையைச் செய்தா அந்த வேலைக்குள்ள மவுசே போயிடும்."

"ஏன்?"

"அவனுக்குக் கொஞ்சம் தலைக்கனம். இயற்கையாகவேநம்போன்ற மொழிப்பற்று உள்ளவர்களிடம் அவனுக்கு வெறுப்பு. இந்த அழகிலே அச்சுக்கோப்பதற்கு எது எது வருதோ அதையெல்லாம் அவன் மனப்பாடம் பண்ணியிருக்கிறான் போலிருக்கு."

"நல்லதுதானே! 'கண்டதைக் கற்றுப் பண்டிதனானான்' என்று பழமொழிகூடச் சொல்வார்களே! பெர்னாட்சா இப்படிக் கண்டதைக் கற்றுப் பெரும் புலவர் ஆனவர் தானே!"

"ஐயோ, அது வேறே செய்தி. இவன் முரண்பட்ட வெவ்வேறு கருத்துக்களையெல்லாம் ஒருசேர மனப்பாடம் பண்ணிக்கொண்டிருக்கிறான். அப்படி மனப்பாடம் பண்ணிக்கொண்டுவிட்டதில், எது சரி, எது நேரானது, எது நேர்மைக்கும் நீதிக்கும் புறம்பானது என்று அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் ஒப்புக்கொள்கிறான். எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளுகிறான். அவன் ஒரு குழப்பவாதியாகிவிட்டான். இன்னும் விளக்கமாகச் சொல்கிறேனே. சாணக்கியனின் அர்த்த சாஸ்திரமும் அவன் கைக்குக் கிடைத்திருக்கிறது. வள்ளுவரின் திருக்குறளையும் அவன் பார்த்திருக்கிறான். இரண்டையும், சும்மா நெட்டுருப் போட்டுக்கொண்டுவிட்டான். 'இரண்டு கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டேன்' என்கிறான். அதுவே சரியென்றும் வாதமிடுகிறான்."

"அது எப்படி ஏற்றுக்கொண்டுவிட முடியும்? ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட கருத்துக்கள் ஏராளமாக இருக்குமே! — இரண்டையும் படிக்கவேண்டியதுதான். ஆனால் இரண்டிலுமுள்ள கருத்துக்களை ஒப்புநோக்கி அறிவுக்குப் பொருத்தமானதை, நியாயத்துக்கும், மனச்சான்றுக்கும் பொருத்தமானதை

(4-ம் பக்கம் பார்க்க)

வரியோ வரி!

மலர் 20 | ஆண்டு சந்தா ரூ. 8 (29—4—62) தனிப்பிரதி 16 காசு [இதழ்

டில்லிப்பேரரசானாலும்சரி, மாநிலஅரசுகளானாலும் சரி, ஒவ்வொரு ஆண்டிலும் தங்களது வரவு செலவுக் கணக்கை மக்கள்முன் வைக்கும்போது,

> "புதிய வரிகள் விதித்தலைத் தவிர வேறு வழி இல்லை"

என்ற ஒப்பாரியைத் தங்களது வாடிக்கையாக்கிக் கொண்டுவிட்டனர்.

எந்த ஒரு ஆண்டிலாவது புதியவரிகள், அவை மறைமுகவரியோ அல்லது வெளிப்படை வரியோ விதிக்காமல் செலவினங்களைச் சரிக்கட்ட முடியும் என்ற நிலை ஏற்பட்டதில்லை.

சுதந்தரம் பெற்றுப் பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன.

சுதந்தரம் பெற்றுவிட்டால் சுகம் கிடைக்கும்—சோகம் நீங்கும் என்று சொல்லப்பட்டது.

ஆனால், சுதந்தரம் சுகத்தையும் தரவில்லை—சோகத்தையும் நீக்கவில்லை—குறைக்கவில்லை.

ஒவ்வொரு ஆண்டிலும புதுப்புது வரிகள் போட்டு மக்களை அவதிக்கும் அல்லலுக்கும் ஆளாக்கும் போக்கில் அரசாங்கம் நடைபெற்றுக்கொண்டு போகின்றதென்றால், அதை மக்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் பொறுத்துக்கொள்வர்?

நாட்டின் நல்வாழ்வுக்கென்று திட்டங்கள் பல தீட்டப்பட்டுச் செயல்படுகின்றன.

ஆனால், அவை எதுவும் மக்களின் நல்வாழ்வுக்குத் துணைபுரிவதாகத் தெரியவில்லை. மாறாக இன்னல்களே மிகுந்து வருகின்றன.

அரசாங்கத்தின் வரிவிதிப்புமுறையால் ஏழைகளும் நடுத்தர வகுப்பினருமே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

புதியவரிகள் போடுவதன் வாயிலாகக் குறைந்த வருமானமுள்ள மக்கள் நுகர்ந்துவரும் வேதனை மேலும் அதிகப்படுமேயன்றிக் குறைய வழி வகுக்கப்படவில்லை.

ஏதாவது ஒரு பண்டத்தின்மீது வரிவிதிக்கப்படும் என்று அறிவித்த உடனே, வியாபாரிகள், தங்களிடம் ஏற்கெனவே குறைந்த விலைக்கு வாங்கிவைத்திருக்கும் பொருள்களுக்கு விலையை ஏற்றிவிட்டு,

> நாங்கள் என்னசெய்யமுடியும்? அரசாங்கம் "வரி விதித்துவிட்டதே"

என்று சிறிதும் தயக்கமோ பச்சாதாபமோ இன்றிக் கூறிவிடுகிறார்கள்.

வியாபாரிகளில் பலர் வரி உயர்வை ஒரு சாக்காகக்கொண்டு இன்னும் ஒரு மடங்கு விலையை அதிகமாக்கி விற்பதையே தங்கள் இலாபநோக்காகக்கொண்டுள்ளனர் என்பது நாடறிந்த இரகசியம்.

இப்படி விலை உயர்வு ஏற்படுவதாலேயே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவும், உத்தியோகங்களில் இருப்பவர்கள் சம்பள உயர்வோ கிராக்கிப்படியோ கேட்கவும் அரசாங்கம் வழிகோலிவிடுகின்றது.

விளக்கைவைத்துக்கொண்டு கிணற்றில் விழுவதுபோல், பின்னால் விளையக்கூடிய தொல்லைகளைத் தெரிந்தும் தெரியாததுபோல் ஒரு அரசு நடந்துகொள்கின்றதென்றால், அதனிடம் நிர்வாகத்திறமை இருக்கிறதென்று யாரும் துணிந்துகூற அஞ்சுவர்.

மக்களின் வாழ்க்கைத்தரம், பொருளாதார நிலைமை ஆகியவைகளை முன்கூட்டியே அறிந்து, அரசு தனது வரவுசெலவுத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

இதுவரை திட்டங்களின்பேரால் தீட்டப்பட்ட வரவு செலவுக் கணக்குகள் எல்லாம் தோல்வியே கண்டிருக்கின்றன.

முதலாவது திட்டத்தைவிட, இரண்டாவது திட்டத்தில் விலைவாசிகளின் உயர்வு 30-சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

இப்போது, மூன்றாவது திட்டத்தில் மேலும் விலைவாசிகள் உயரும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அரசாங்கம் போடவிருக்கும் அதிக வரிகளே அந்தப் பரிதாபகரமான நிலையை உண்டாக்கிவிடுகின்றன.

எனவே, மேலும் மேலும் வரிச்சுமையை மக்கள் மீது ஏற்றி, அதிலும், ஏழை எளியவர்கள்மீது இந்தத் தாங்கமுடியாத சுமையை ஏற்றி இன்னல்களுக்கு ஆளாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.

௨-ம் பக்கத் தொடர்ச்சி

மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். கற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறை: கற்றதனாலாய பயன்.''

“அந்தத் தன்மை, அந்த இயல்பு அவனிடம் மாதிரிக்குக்கூட இல்லையே! அவன் குழப்பவாதியாகிவிட்டான். ‘நுண்ணிய நூற்பல கற்பினும் தன் உண்மை அறிவே மிகும்’ என்ற கருத்தை எள்ளவும், இகழவும் துணிவுகொண்ட நல்லவனாகிவிட்டான்.''

“பாவம், அவன் பழகும் சூழ்நிலை அப்படிப்பட்டது!''

“நான்கூட அப்படித்தான் எண்ணினேன். ஆனால் போகப் போக அவன் கொட்டம் மிகுந்துபோய்விட்டது. குழப்பக்கூக்குரல் மிகுந்து போய்விட்டது. ஒருதடவை என்னுடைய ஆசிரியர் ஒருவரின் கருத்துப்படையல் அச்சுக்குப்போயிற்று. அதை அச்சுக்கோக்கும் பணி அந்தக் கோவிந்தனிடம் போய்ச் சேர்ந்தது. அவன் என் ஆசிரியரின் அருமையான கருத்துக்களையெல்லாம் மறுத்து மறுத்து இகழ்ந்துரையாடினான். அப்போது எனக்குச் சிரிப்பாகத்தான் இருந்தது. பேராசிரியர் ஒருவர் சொன்னதைத்தான் அப்போது நான் நினைத்துப் பார்த்துக்கொண்டேன். ‘நல்லாசிரியன் ஒருவன், சிறந்த எழுத்தாளன் ஒருவன் இயற்றிய நூலிலேயுள்ள குற்றங் குறைகளை அந்த ஆசிரியனுக்கு இணையான அறிவினையுடைய, எழுத்தாற்றலையுடைய வேறொரு நல்லாசிரியன் கண்டுபிடித்துச் சொன்னால், அது பொருத்தமாக இருக்கும். சரிபார்த்த நல்லாசிரியன் அதை அச்சுக்குக் கொடுத்த பிறகு, அச்சுக்கோப்பதை மட்டுமே தொழிலாக உடையவன், —அதற்குமேல் விரிவில்லாத அறிவினையுடையவன் அந்த நூலிலே குற்றங்குறைகளைக் காண்கிறான் என்றால், அதுசரியாகவா இருக்கும்? ஒன்று சொல்லப்படுகின்ற குற்றங்குறை வேண்டுமென்றே சொல்லப்படுவதாக இருக்கும். அல்லது அறியாமையால் சொல்லப்படுவதாக இருக்கும், அந்தப் பேராசிரியர் இதை மேற்கோளுக்காகச் சொன்னார். இங்கே என்னடாவென்றால், உண்மையாகவே அவ்வகை ஆள் ஒருவன் நல்லாசிரியர் ஒருவரின் எழுத்துரையைப் பார்த்து இகழ்ந்துரையாடிக்கொண்டு நிற்கிறான்.''

“என்ன அப்படி இகழ்ந்துரையாடுகிறான்.''

“நாம் அறிவுப்பணி என்கிறோமே, அதையே அவன் முதலடியாகச் சாடுகிறான். ‘நாட்டிலுள்ளவர்கள் எல்லாம் அறிவில்லாதவர்களா? நீ அவர்களிடமெல்லாம் அறிவைப் பரப்பப் போகிறாயா?’ என்று கேட்கிறான்.

“பாவம், உண்மை அறிவே மிகும் என்று கூறிய வள்ளுவனையும் சாடுகிறான் என்று நீ சொன்னது சரிதான்.''

“ஆமாம், சாடுகிறான். சாடிக்கொண்டேயிருக்கிறான்.''

“ஞானோபதேசம், ஞானோபதேசம் என்று கேட்டுக் கேட்டுப் பழகிப்போன உன் செவிக்கு அறிவுப்பணியென்றால் வெறுப்பாகத்தானிருக்கும். அறிவுப்பணியென்பது உன்னைப்போன்றவர்களின் உள்ளங்களில் புதைந்துகிடக்கும் பொருமைக் குணத்தையும், மாசுநிறைந்த இழிதன்மையையும்கெடுமதியையும் பாரறிய வெட்டவெளிச்சமாக்குவது; நீங்களும்உங்கள்தவறினைஉணர்ந்துகொள்ளுமாறு செய்வது; உங்கள் உள்ளத்து மாசுகளை நீக்கிக் கொள்ளுமாறு செய்வது; நல்லவர்கள் சொல்கின்ற அருமையான கருத்துக்களை எல்லாம் நீங்கள் திரித்துக் கூறுகின்றீர்கள்; அது வேண்டாத வேலை என்று எடுத்துச் சொல்வதும் எங்கள் அறிவுப்பணிதான், என்று நீ விளக்கிச்சொல்வதுதானே!''

“நான் இன்னும் தெளிவாகத்தான் எடுத்துச் சொன்னேன். ஆனால், அவனுடைய மூளையில் நல்லது ஏறுவது மிகமிகக் கடினம்.''

“அதைமட்டுமா அவன் சொன்னான் என்று நினைக்கிறீர்கள். அவன் இன்னும் சொன்னானே! பிறர் உழைப்பரல் வாழ்கின்றவர்கள் தாம் திராவிடநாடு வேண்டும் என்று அறிவுப் பிரசாரம் பண்ணுகிறவர்களாம்! உழைக்கத் தெரியாதவர்கள்தாம் அப்படிப் பேசிக்கொண்டு திரிகிறார்களாம்!''

“நீ அதைக் கேட்டுக்கொண்டு சும்மாவா நின்றாய்?''

சும்மா நிற்பேனா! கொடுத்தேன் செம்மையாக!''

“என்ன?''

“அறிவு விளக்கங்கள் கொடுத்தேன். அதோ பாரடா கழுதை! வேகாத வெயிலில் விறகு பிளக்கும் பாட்டாளி. அந்தப் பாட்டாளி கேட்கிறான் திராவிடநாடு — அவன் வாழ்விலே வளத்தைக்காண. ஆலையிலே அற்றைக் கூலிக்கு வேலை செய்பவன், தெருவிலே மூட்டை சுமப்பவன், அலுவலகத்தில் முதுகெலும்பு முறியப் பாடுபடுவன் — இவர்களையெல்லாம் நீ சந்தித்திருக்கமாட்டாய். ஆனால் தொலைவில் நின்று பார்த்திருப்பாய். நான் அவர்களைச் சந்திப்பவன் தினம்தினம். அவர்களைப்போய்க் கேட்டுப்பார். திராவிடநாடு கேட்பது யாரென்று; நல்ல விளக்கம் தருவார்கள். ஆனால் ஒன்று, நீ என்னைப்போன்ற படித்தவர்களிடம், விவரம் தெரிந்தவர்களிடம் முரட்டுத்தனமாகப் பேசுவதுபோல் அவர்களிடமும் கன்னாபின்னா என்று எதையும் உளறிக் கொட்டிவிடாதே! ஏனென்றால்,— அந்தப் பாட்டாளிகள் எல்லாருமே நல்லவர்கள்; ஆனால் — அந்த நல்லவர்களிலே மிகச்சிலர் கோபக்காரர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் உன் அறிவுகெட்ட பேச்சைக் கேட்டு ஆத்திரங்கொண்டுவிடுவார்கள்; பிறகு......''

“அடடே, இவ்வளவுதூரம் பேசிவிட்டாயா? யாரையும் இழிவுபடுத்தும் சொல்லை மறந்துகூடப் பேசக்கூடாது!''

“அவன் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. நாட்டுக்காக உழைக்கின்றவர்கள் எல்லாம் பிழைக்க வழி தெரியாதவர்கள் என்று கூறுகின்றானே, எவ்வளவு திமிர் இருக்கவேண்டும் அவனுக்கு!''

“ஒருவகையில் அவர்கள் நமக்கு எதிரிகள் அல்லர். நம் கொள்கையை, நம் நோக்கத்தை நாமே எடுத்துச் சொல்ல முடியாத மூலை முடுக்குகளில் எல்லாம் அவர்கள் தங்கள் குதர்க்க வாதத்தின் மூலம் பரப்பிவிடுகிறார்கள். அந்தமட்டும் அப்படியே அவர்கள் வாழட்டும். வாழ்க எதிரிகள்'' என்றார் அந்தத் தந்தை.

அழுதுகொண்டு வந்த ஆறுமுகமும், அறிவுப் பணியிலிருந்து மீண்டு வந்த மணவழகனும் ‘வாழ்க எதிரிகள்’ என்றனர்.

விடுதலைக்கு ஓர் கடுங்கோன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

காட்சி - 4

இடம்:- அரண்மனைப் பூங்கா

காலம்:- மாலை

[கடுங்கோனும் பூபாலியும், இன்பம் நிறை இதயத்தோடு உரையாடிக்கொண்டு உள்ளனர்.]

பூபாலி:- அன்பரே! கண்டதும் என் கருத்தில் நிரந்தரமாகக் குடியேறிக் கொண்டீர்கள். தங்கள் பேராற்றலும், அறப்பெருங் கருணையும், என் ஆயுளிலே நான் மறக்க முடியாதவை!

கடுங்:- அப்படியானால் நான் கற்றுக் கொடுக்கும் திருக்குறளை மறந்துவிடுவாயோ, பூபாலி?

பூபாலி:- அறிவுச் செல்வமான திருக்குறளை மட்டுமன்று; நீங்கள் எடுத்துக்கூறிய தமிழ்க்கலை, காவியம், ஓவியம், இலக்கண இலக்கியங்கள், பண்பாடு, வாழ்வு நெறி; எதையுமே இனி என்னால் மறக்க முடியாது!

கடுங்:- நன்று! நன்று! அப்படியானால், தமிழ், இலக்கணம், வாழ்வு இவற்றின் சிறப்புக் குறித்துச் சிறிது கூறு பார்ப்போம்!

பூபாலி:- தமிழ் மொழியிலே இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவுகள் உண்டு. எனவே, தமிழை, முத்தமிழ் என்று கூறுகிறோம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பதான ஐவகை இலக்கணங்கள் உண்டு. காதல் வழிப்பட்ட கற்பு நெறிகாட்டும் அகவாழ்வும், ஆற்றல் வழிப்பட்ட ஈட்டுமுறை காட்டும் புறவாழ்வும் விளக்குகின்ற அகநானூறும், புறநானூறும் அழிந்துபோகாமல் இருக்கின்றன! இந்த மூவகைச் சிறப்புகளும் புதுமொழிக்கு மட்டுமன்று; உலகில் எந்த முதுமொழிக்கும் இல்லாத தனிப் பெருஞ்சிறப்புகளாகும்! சரிதானே?

கடுங்:- (மகிழ்ந்து) ஆகா! பூபாலி! தமிழ் வாழ்க! மாசற்ற உனது தமிழார்வம் வாழ்க! நீ வாழ்க!

[கட்டியணைத்துக் கொள்கிறான்]

பூபாலி:- மாவீரரே! "உன் காதல் வாழ்க" என்பதையும் சேர்த்துக் கூறுங்கள். என் தமிழார்வம் எனக்குத் தகுதிவாய்ந்த காதலரைத் தேடிக்கொடுத்தது. அவர் மூலம் நான் கற்கவேண்டியன எவ்வளவோ இருக்கின்றன (நாணத்தோடு)சுவைக்க வேண்டியனவும் இருக்கின்றன!

கடுங்:- கண்ணின்மணியே! மொழியாலும், இனத்தாலும் மாறுபட்ட நாம், காதல் வலிமையால் கை கோர்த்துவிட்டோம்! இளம் உள்ளங்களிலே கொந்தளிக்கும் காதல் இன்பத்தின் இணையற்ற ஆற்றலைக் காட்டுவது இந்தக் கூட்டு! என்றாலும், நான் உயிர் மூச்செனக் கொண்டுள்ள அறிவு பூர்வமான கடமைக்கு, இது முட்டுக்கட்டையாக ஆகிவிடுமோ என்று கலங்காமல் இருக்க முடியவில்லை, பூபாலி!

ப. கண்ணன்

பூபாலி:- கண்ணாளரே! கவலைவேண்டாம்! காதலால் இணைந்துவிட்ட நமக்கு, இனிக் கருத்தும் ஒன்றுதான்; கடமையும் ஒன்றுதான்! செந்தமிழ்ச் செல்வராகிய தங்களது குறிக்கோள் எதுவாயினும் ஏற்றுக்கொள்வேன்; கடமை மறவாது பணியாற்றுவேன்! உடைத்துத் தூள்தூளாக்குவேன், குறுக்கிடும் முட்டுக்கட்டைகளை!

கடுங்:- முட்டுக்கட்டையும், மூள் பகையும், உன் தந்தையின் வடிவத்திலே எதிர்ப்பட்டால்?

பூபாலி:- தயங்கமாட்டேன்; தகர்த்தெறிவேன்!

கடுங்:- பூபாலி! பெருமகிழ்ச்சியடைகிறேன். எனது உரிமைக்கு வலியூட்டும் காதல் மறத்தி நீ! காதல் மறத்தி!

[கட்டித் தழுவிக்கொள்கிறான். "அம்மா, அம்மா" என்று கூவிக்கொண்டு தோழி வைகை, கையிலே குறத்தியாடையோடு, ஓடிவருகிறாள். இவர்கள் பிரிந்து நிற்கின்றனர்.]

பூபாலி:- என்னடி வைகை! என்னடி இப்படி அவசரம்?

வைகை:- நேரம் ஆச்சும்மா. அந்தப் பக்கம் என்னவோ அரவம் கேட்டிச்சு. மகாராணியோ, மத்தவங்களோ வந்திட்டா மோசம்! இந்தாங்க போடச் சொல்லுங்க வேஷத்தை!

பூபாலி:- (வாங்கி) மாவீரரே! என்னை மறத்தி என்று புகழ்ந்தீர்கள்! நீங்கள் குறத்தியாக வேண்டுமாம்! வைகை சொல்லுகிறாள்.

கடுங்:- காதல் சுரத்தின் வேகம்,குறி சொல்லும் குறத்திக்குத் தெரியும். பாவம்! வைகைக்கு என்ன தெரியும்? கொடு! கொடு!

பூபாலி:- (கொடுத்து) நாளை, சற்று முன்னரே வந்துவிடுங்கள்.புன்னை மரத்தடியில் தின்பண்டத்தோடு காத்திருப்பேன்!

கடுங்:- தின்பண்டம்! உனது கனியிதழைக் காட்டிலுமா தித்திக்கும்? இதைக் கொண்டுவா மறக்காமல்!

[அவள் வாயிதழைத் தொட்டு விரலைச் சுவைத்துச் செல்லுகிருன் கடுங்கோன்.]

○

காட்சி - 5

இடம்:- சேந்தன்வழுதி இல்லம்.

காலம்:- பிற்பகல்.

[ஐயனடியாள் சுவடி படித்துக் கொண்டிருக்க, சேந்தன்வழுதி வருகிருன்.]

ஐயன:- (எழுந்து) வாருங்கள் நாதா! உட்காருங்கள். அரசாங்கப் பணி உங்களை அரை நாழிகையும் என்னிடம் தனித்துப் பேசவிடாதது போலிருக்கிறதே! மதுரையினின்றும் வந்ததுமுதல் ஏன் இப்படி ஓய்வின்றி அலைகிறீர்கள்?

சேந்த:- மன்னரிடம் ஏற்றுக்கொண்டேன் புதுக் கடமையொன்று! அதை நிறைவேற்றிவிட்டால், ஐயனடியாள்! நான்தான் பாண்டி மண்டலத்தின் பிரதம தளவாய்!

ஐயன:- அப்படியொரு நிலைமையோ? மெத்த மகிழ்ச்சி! அது என்னதான் கடமையோ?

சேந்:- அதெல்லாம் அரசாங்க மறை பொருள்! கூறமாட்டேன். உன் தம்பியின் செய்தி தெரியுமோ உனக்கு?

ஐயன:- என்ன செய்தான் என் தம்பி?

சேந்:- காதல் எனும் பூங்காவில் பறக்கின்ற வண்டாகிவிட்டான்!

ஐயன:- காதலா? என் தம்பியா?

சேந்:- குட்டுப்பட்டாலும் மோதிரக் கைதான்! பாதகமில்லை. இளவரசி பூபாலியின் மையல் அவனது புலன்களையே மாற்றிவிட்டது! காதலியைச் சந்திக்கப் பெண் வேடம் போடவும் தொடங்கிவிட்டானே! பேசுவதெல்லாம் வீராப்பு! செய்வதெல்லாம் பேடித்தனம்!

ஐயன:- இது உண்மையாக இருக்கவே முடியாது! எப்படித் தெரியும் உங்களுக்கு? மதுரைக்கு மன்னரைப் பார்க்கவன்றோ போனுன்?

சேந்:- ஆமாம். அரண்மனைக்கு அழைத்துப் போனேன். மன்னரைப் பார்க்கமுடியவில்லை. இளவரசியைப் பார்த்தான் அவளும் பார்த்தாள். என்னவோ நடந்துவிட்டது இருவரது பார்வையிலும்! குறத்தி வேடமிட்டு அடிக்கடி அரண்மனைப் பூங்காவுக்குப் போகிருனே! நடக்கலாமா, இது?

ஐயன:- இதந்த ஆதாரம்?

சேந்:- சிவமாறன் வீட்டிலிருந்த குறத்தியாடையை நானே கண்டேன். சந்தேகமாயின், அதோ வருகிறான் கடுங்கோன்; அவனே கூறுவான், கேள்!

[கடுங்கோனும் சிவமாறனும் வருகின்றனர்.]

ஐயன:- (கடுப்பாக) தம்பி! நீ எதற்குச் சென்ருய் மதுரைக்கு?

கடுங்:- கேள்வியில் ஏனக்கா இவ்வளவு கடுமை?

ஐயன:- போனவேலையை மறந்து பொல்லாத செயலில் இறங்கிவிட்டாயாமே! மன்னன் மகள், பூபாலியிடம் காதல்கொள்ளலாமா நீ? பகடிசெய்கிருரே உன் அத்தான், பதைக்கிறதடா என் மனம்!

கடுங்:- மன்னன் மகளைக் காதலிப்பது உண்மை! மற்றவர் பகடி செய்வதற்கு என்ன இருக்கிறது? இளவரசியை நான் காதலிப்பதால், எனது குறிக்கோள் மாசு பட்டுவிடாதே! மன்னவர் செய்யும் கொடுஞ்செயல்களை இனி நான் மட்டுமன்று, இளவரசியும் சேர்ந்தே எதிர்ப்பாள்!

சேந்:- எதிர்ப்பா? பெற்றமகளே எதிர்க்கும்படியான அத்தகு மாபெருங்கொடுமை என்னப்பா செய்துவிட்டார் மன்னவர்?

கடுங்:- எத்தனையோ செய்கின்ருர்! ஒன்று கூறுகிறேன். இருகளப்பிர வீரர்கள் குடிமகன் ஒருவனது மனைவியைத் தூக்கிச்சென்றுவிட்டனர். வேந்தரிடம் அவன் முறையிட்டான். நாடு காக்கும் படை வீரர் குற்றம்புரிந்தால் தண்டியேன் என்ருர். கொதித்துக் கேட்டவனைக் குத்திக் கொன்ருர்! பார்த்திருந்த என் ஆவி துடித்தது. நீதியற்ற செயல் என்றேன். நீட்டினுர் என்னிடமும் வாளை! தாககினேன்; வீழ்த்தினேன் தரையில். மாய்த்திடக்கருதினேன் மன்னனை. பூபாலியின் வேண்டுகோளுக்காக விட்டுவந்தேன் பாவியை!

சேந்:- (வியந்து) ஆ! மன்னரைக் கொல்ல முயன்ற படுமூர்க்கன் நீதானு?

கடுங்:- படுமூர்க்கனு? நீதிகேட்ட குடிமகனை வெட்டிக்கொன்ற வேந்தன் மூர்க்கனு? தட்டிக் கேட்ட நான் மூர்க்கனு?

சேந்:- மன்னவரைப் பழிக்காதே! வீரத்தையும், வீரர்களையும் என்றுமே கௌரவிப்பவர்! தவறிழைத்த வீரரைத் தண்டிக்காது விட்டது பெருந்தன்மை! அந்த உயர் தத்துவத்தின் பண்பறியா உலுத்தர்களே இப்படித் தாவிக் குதிப்பார்கள்!

கடுங்:- (கடுப்பாக) அத்தான்! பண்பறியாதவர்......

ஐயன:- (குறுக்கிட்டு) நிறுத்தடா தம்பி! விவாதம் வேண்டாம். இது போன்ற தத்துவச்சிக்கல்குறித்துப் பேசுவதற்குத் தகுதியற்றவர்கள் நாம்! பட்டமும், பதவியும் பெற்ற மேதாவிகள்; தர்க்கநூல் கற்ற வித்தகர்கள்; தமிழ்ச்சங்கம் அழித்தும் புதுச்சங்கம் தோற்றுவித்த பூபாலர்கள்; அதனைச் செய்யட்டும்! நமதுபணியை நாம் செய்வோம்!

கடுங்:- மன்னிக்கவேண்டும், தமக்கையே!

சேந்:- நன்று. என் பணி எனக்குத் தலைக்குமேல் இருக்கிறது. ஐயனடியாள்! நான் இப்பொழுதே புறப்படவேண்டும் மதுரைக்கு. சென்று வருகிறேன்.

[விடையை எதிர்பாராமல் விரைந்து செல்கிருன்சேந்தன் வழுதி]

கடுங்:- அக்கா! நமது குடிப்பகைவன் கண்டகதேவன். அவனது குமாரியை நான் காதலிப்பது குற்றம்தான்! ஆனுல், செந்தமிழ் மொழியிலும், நெறியிலும் சிந்தை மிகக்கொண்டவள்! நீதிக்குப் பரிந்துபேசும் நேர்மையுள்ள வீராங்கனை! நமது குறிக்கோளின் வெற்றிக்குத் தக்கதொரு படைக்கலன் பூபாலி!

ஐயன:- தம்பி! ஆயிரம் காரணங்கள் கூறினுலும் பகைவன் மகளிடத்தில் பரிவு காட்டுவதை ஒப்பமாட்டேன்! இப்பொழுது தானே கூறினுய் "மாய்த்திடக் கருதினேன் மன்னனை. பூபாலியின் வேண்டுகோளுக்காக விட்டு வந்தேன்" என்று. அது யாருக்கடா வெற்றி?

கடுங்:- வாழவிட்டது மன்னனுக்கு வெற்றியாக இருக்கலாம். இளவரசியைக் காதலிப்பது எனக்குத்தான் வெற்றி! அக்கா! நான்

மதுரையினின்றும் நல்லதொரு முடிவோடு திரும்பியுள்ளேன்!

ஐயன:- என்ன முடிவு?

கடுங்:- கண்டகனின் கொடுமை தாளாது மதுரையிலே கொதித்து நிற்கின்றனர் தமிழர்கள்! களப் பிரப்படை வீரர்களின் சமயவெறி, மொழிவெறி, கொலை வெறிகள், தமிழப் படைவீரர்களிடையே வலுவான எதிர்ப்புணர்ச்சியை வளர்த்துள்ளன! தக்க தலைமை யின்றிப் புகையினுள் நெருப் பாகப்புழுங்குகிறது;தமிழாண்மை ஏற்றசமயம் இதுதான்! மதுரை மேற் பாய்ந்திடக் கொற்கையிலே படையொன்று திரட்டவேண்டும். கருவிகள் செய்து குவிக்க வேண்டும்! இதுதான் இப்பொழுது எனதுமுதற்பணி! இதற்கென்றே அழைத்து வந்தேன் கொல்லன் சிவமாறனை!

ஐயன:- மிக்க நன்று. தக்கவேளை யிலே தக்கதொரு பணியினை மேற்கொண்டாய்! தம்பி! தமிழ் இனத்தின் அடிமைத் தளைஅறுக் கும் உனது பெருமுயற்சி வெல்க! படை திரட்டுதற்கும் கலன் படைப்பதற்கும் பொருள்மிகத் தேவைப்படும்! இதோ, எனது முத்துமாலையும், மாணிக்க வளைய லும், காணிக்கையாகத் தரு கிறேன்.(கழற்றிக் கொடுக்கிருள்) பலவூர்களில் சிதறுண்டுகிடக்கும் நமது பாண்டியக் குடியினரை அணுகு; ஒன்றுபடுத்து! நண்பர் களை, நல்ல தமிழர்களைக் கூட்டு; படையும் நிதியும் பெருக்கு! வெற்றி நமதே!

கடுங்: மிகுவணக்கம், தமக்கையே!

சிவமா:- தேவியாரே! தங்கள் கண வர் வேறுபட்ட கடமையில் இருக் கிருரே! நமது முயற்சிக்கு மாறு பட்டுத் தடுக்க முனைவாரோ?

ஐயன:- நிச்சயமாகத் தடுப்பார்! அரசாங்கக் கடமைக்கு முதன்மையளிக்கும் தளவாய், நம்மை எதிர்த்தாலும் வியப்படை வதற்கில்லை! நாம் கொண்டிருக் கும் குறிக்கோள் மிகப்பெரிது. எத்தகைய இடையூறுகள் நேரி னும் ஏற்கச் சித்தமாக வேண்டும்! எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!

இருவரும்:- எந்தத் தியாகத்திற்கும் நாங்கள் சித்தமாகிவிட்டோம்!

[இருவரும் வணங்குகின்றனர்.]

O

காட்சி - 6

இடம்: மதுரை அரண்மனை.

காலம்: பிற்பகல்.

[மன்னன் கண்டகதேவனும். தளவாய் காளிங்கனும் இருக் கின்றனர்.]

காளிங்கன்:- வேந்தே! நமது மொழி பாலிக்கு, தனிப்பெருமை கிட்ட வேண்டும். பாலி மொழியே பூமி யாளவேண்டும் என்ற பெருநோக் கில் இளவரசிக்குப் பூபாலி என்று பெயர் சூட்டினுர் நமது முனிநாதர். அந்தக் கருத்தையே சிதைத்து விட்டாளே இளவரசி!

கண்டகதேவன்:- எப்படி? என்ன செய்தாள் பூபாலி?

காளி:- அரியமொழி பாலியிருக்க, அடிமை மொழி தமிழை விரும்பு கிருளே! நாம் நசுக்கி வரும் தமிழ்க் கலைகளையும், இலக்கியங்களையும், மறைவாகப் பயிலுகிருளே! அழிக் கப்படவேண்டிய தமிழுக்கு ஆக் கம் கொடுக்கிருளே! நமது ஆட்சி யிலே இது நடக்கலாமா வேந்தே?

கண்ட:- காளிங்கா! மறைப்பதில் பயனில்லை; உனது விருப்பம் நானறிவேன். பூபாலி உன்னை மணக்க மறுக்கிருள் என்பதற் காக, குற்றம் சுமத்தாதே! ஒன்று செய்; அன்ருெரு நாள் என்னைக் கொல்ல முனைந்த முரடனைக் கண்டுபிடித்துக் கொண்டுவா! உனக்குப் பிரதம தளவாய் பதவி யோடு, பூபாலியையும் கொடுத்து விடுகிறேன்! அவளை நீயே திருத் திக் கொள்ளலாம்!

காளி:- களப்பிரப் பேரரசின் பிரதம தளவாயாகச் சேந்தன் வழுதி போன்ற தமிழர்கள் நியமனம் பெறுவது, களப்பிர வீரர்களுக்குப் பேரவமானம்!

கண்ட:- உணருகிறேன் காளிங்கா! நன்கு உணருகிறேன். பதவிமட்டு மன்று; பாவையையும் தரு கிறேன்; கட்டளையை நிறை வேற்று.

காளி:- மிக்க நன்றி. அவ்வாறே செய்து முடிக்கிறேன்.

[காளிங்கன் வணங்கிச் செல்ல, சேந்தன் வழுதி வருகிருன்.]

சேந்தன்:- வணக்கம் மாமன்னு!

கண்ட:- வருக சேந்தன் வழுதி! சேர நாட்டு எல்லைக் குழப்பம் அடங்கி விட்டதா?

சேந்தன்:- நான் சென்றும் அடக்கா மல் திரும்புவேனே? வேந்தே! குழப்பம் செய்த குடிமக்களே வலிய வந்து மன்னிப்புக் கேட்கு மாறு செய்தேன்!

கண்ட:- நன்று. பாராட்டுக்குரியது உமது இராசதந்திரம்!

சேந்தன்:- மற்ருெரு முக்கியசெய்தி!

கண்ட:- என்ன அது?

சேந்தன்:- பாண்டி மண்டலத்தின் பிரதம தளவாய்ப் பதவி ஒன்று. வேட்பாளர்களோ காளிங்கனும் நானுமாக இருவர். இந்தச்சங்கடம் விலக நல்லதொரு முடிவு நேர்ந்து விட்டது!

கண்ட:- (வியந்து) சேந்தன் வழுதி! அப்படியென்ருல், அந்த மூர்க்க னைத் தேடிப்பிடித்துவிட்டாயோ? எங்கே அந்த இழி மகன்?

சேந்தன்:- இருக்கிருன் வேந்தே! விரைவில் மதுரைக்கு வருவான். அரண்மனைப் பூங்காவிலும் நுழை வான்! ஆனுல்...

கண்ட:- ஆனுல், என்ன?

சேந்தன்:- பிடிப்பதற்கு, சற்று மறை முகமான முயற்சி தேவை!

[மன்னனின் செவியருகே சென்று, "என் மைத்துனன் கடுங்கோனே தங்கனைத் தாக்கியவன். குறத்தி வேட மிட்டு அரண்மனைப் பூங்கா வில் இளவரசியிடம் காதல் புரிகிருன்" என்று கூறுகிருன் சேந்தன் வழுதி]

O

காட்சி - 7

இடம்:- அரண்மனைப் பூங்கா

காலம்:- மாலை

[கடுங்கோனும், பூபாலியும் களிப்புடன் இசைபாடி மகிழ் கின்றனர்.]

கடுங்:-பைந்தமிழும் சுவையும் போலே
பண்ணமுதும் சுதியும் போலே
செந்தழலும் சுடரும் போலே-அன்னமே
சேர்ந்த பெரு வாழ்விதுவே!

பூபாலி:-மல்லிகையும் மணமும் போலே
வான்மதியும் ஒளியும் போலே
நல்லிசையும் யாழும் போலே-கன்னலே
நமிருவர் கூடி விட்டோம்!

]கட்டித் தழுவுகையில் திடீ ரென்று, கண்டகதேவன், காளிங்கன் மற்றும் சில வீரர் கள் தோன்றுகின்றனர். கடுங்

கோன் கைது செய்யப்படு கிருன்]

பூபாலி:- (பதறி, காலில் விழுந்து) தந்தையே! வேண்டாம் விட்டு விடுங்கள் அவரை. கருணை கூர்ந்து விட்டுவிடுங்கள்.

கண்ட:- கையும் களவுமாகப் பிடித்த கள்வனை எதற்கடிவிடவேண்டும்?

பூபாலி:- காதலித்தது குற்றமென்ருல், அதைச் செய்தது நான் தான். என்னைத் தண்டியுங்கள். அவரை விட்டுவிடுங்கள்!

கண்ட:- இழி பிறப்பே! பிறந்த குடிக்கும், பெற்ற தந்தைக்கும் துரோகமிழைத்தவளே! என்னைக் கொல்லத் துணிந்த பகைவனிடம் கொஞ்சிக் குலாவுகிருய்! பிடித்த பிறகு விட்டுவிடும்படி கொஞ்சிக் குலாவுகிருய்! பிடித்த பிறகு விட்டு விடும்படி கெஞ்சிக் குழைகிருய்! தூ! நீயும் ஒரு பெண்ணு?

பூபாலி:- தந்தையே! நீங்களும் ஒரு மன்னரா என்று நான் கேட்க விரும்பவில்லை! ஆனல், அறம் திறம்பாத இம்மாவீரதை அழித்திட்டால், குடிமக்கள் கேட்பார்கள் தங்களைப் பார்த்து!

கண்ட:- குடிமக்கள்! என் கால் மிதியடியின்கீழ் கசங்கிப் பறக்கின்ற தூசு! இந்த நாடே என்னை எதிர்த்தாலும் இந்த நச்சரவைத் தண்டிக்காது விடமாட்டேன்!

கடுங்:- மன்னு! என்னைத் தண்டிப்பதுபற்றிக் கவலையில்லை. மக்கள் மன்றத்தைக் கூட்டும்; நான் செய்த குற்றம், செய்த அரசத்துரோகம் இன்னதென்று மன்றத்திலே எடுத்துக்கூறும். எனது நியாயத்தையும் கருத்தையும் நான் கூறுகிறேன். மன்றம் இடுகின்ற எந்தத் தண்டனையும் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன்! அத்தகைய நீதிகாக்கும் நல்லாண்மை இருக்குமா உம்மிடம்?

கண்ட:- பொல்லாதவனே! இந்தச் சாகசம் செல்லாது என்னிடம்! என்னைப் பகைத்தவனுக்கு என் மகளிடம் காதல் புரிய எப்படி வந்தது துணிச்சல்? இப்பொழுதே உன் தலையைத் துண்டித்துக் கோட்டை வாயலில் தொங்கவிடுவேன்! என்னருமைத் தளவாய் சேந்தன்வழுதியின் மைத்துனன் என்பதற்காகச் சற்றுத் தயங்குகிறேன்.

காளிங்:- வேந்தே தவறு செய்த மைத்துனனைக் காட்டிக் கொடுக்கத் தயங்காதவர்; அவருக்காகத் தயங்கவேண்டியதில்லை. கட்டளையிடுங்கள்; கண்டதுண்டமாக்குகிறேன், கள்ளக் காதல் புரிந்த கயவனை!

பூபாலி:- என் காதலரைத் துன்புறுத்துவதால் கலங்குவேன், இணங்குவேன் என்று கனவு காணவேண்டாம் காளிங்கரே! கடுங்கோன் பாண்டியரை மட்டுமல்ல, என்னையும் சேர்த்துச் சித்திரவதை புரிந்தாலும் நிறைவேருது உமது துராசை!

கண்ட:- மூடடி வாயை மூளிச் சிறுக்கி! வாய்மதம் சிந்தாதே! வீரர்களே, (கடுங்கோனைக்காட்டி) இழுத்துச் செல்லுங்கள் இந்த இராசத்துரோகியை! அடைத்து வையுங்கள் சிறைச்சாலையில்!

கடுங்:- (மனம் பொங்கி) பூபாலி! என்ஞல் நீயும் இழிவு பெற்ருயே!

பூபாலி:- கண்ணுளா! இழிவும், பழியும் இருவருமே அனுபவிப்போம்!

[வீரர்கள் கடுங்கோனை இழுத்துச் செல்கின்றனர்.]

கண்ட:- எங்கேயடி அனுபவிக்கப் போகிருய் குலத்துரோகி! தளவாய் காளிங்கனைத்தான் நீ மணக்க வேண்டும்! இணங்கிவிடு! பிணங்கிஞல் பிணமாவாய்!

பூபாலி:- என் பிணமும் ஒப்பாது இவரை மணப்பதற்கு!

கண்ட:- (சினந்து) ஆ! அவ்வளவு தலைக்கனமாஉனக்கு? காளிங்கா! திருமணம் நடக்கும்போது நடக்கட்டும்! இவளை இன்றே உனக்கு மனைவியாக்கிவிட்டேன்! இழுத்துச் செல்; இஷ்டம்போல் நடத்து! இவளது அகம்பாவத்தைக் கரைத்துவிடு! ஆணவத்தை ஒடித்துவிடு!

[ஐயோ! என்று அலற அலற பூபாலியைப் பற்றி இழுத்துச் செல்கிருன் காளிங்கன்]

○

காட்சி - 8

இடம்: சேந்தன் வழுதி இல்லம்.

காலம்: முற்பகல்.

[ஐயனடியாள் சோகத்தோடு வீற்றிருக்கிருள். வீரர்கள் சிலர் நிற்கின்றனர். சிவமாறன் பேசுகிருன்.]

சிவமாறன்:- நண்பர்களே! நல்லாண்மையாளரே! படைப்புக்காலந் தொட்டு நாடாண்ட வீரர்கள் தொல்குடிப் பாண்டியர்கள்! அந்தக் கால்வழியிலே வந்த நாம், கண்மூடித்தனமாக மாற்ருனின் தாள்வருடிக் கிடக்கின்ருேம்! சமயத்தாலும், மொழியாலும் வேறுபட்ட பகைப்புலத்தார், சங்கத் தமிழை ஒதுக்கிவிட்டுப் பாலி மொழியை அரசபீடம் ஏற்றிஞர்கள்; அன்பு வளர்க்கும் நெறியை முடக்கிவிட்டுச் சமணம், பௌத்தம், காபாலிகம், காளாமுகம் போன்ற துன்பச் சமயங்களைப் பரப்பிஞர்கள்; எதிர்த்தோரை மடித்தார்கள்; தமிழ் மொழியும், மரபும் அழித்து, தமிழர் வாழ்வு நெறிப் பண்பாட்டையே பாழாக்கிஞர்கள்! வீழ்ந்துவிட்ட தமிழ்க் குடியில் தோன்றிஞன், படை மறவன் பாண்டியன் கடுங்கோன்! தாழ்ந்துவிட்ட தமிழ்மொழியை தலைநிமிரவைக்கவேண்டும்; இழந்துவிட்ட நாட்டுரிமையைத் திரும்பப் பெறவேண்டும்; என்ற விடுதலைத் தன்மான முழக்கமிட்டான்! நீதிகேட்ட குடிமகனைக் கொன்றிட்ட நெறிகெட்ட களப்பிரனை அவனது காவல் மனையிலேயே தாக்கி வீழ்த்திஞன். தலை குனியவைத்தான்! அந்த மான மறவன் இப்பொழுது எங்கிருக்கிருன் தெரியுமா? எவனே ஒரு கயவனல் காட்டிக்கொடுக்கப்பட்டு, அரசத் துரோகி என்ற பெயரால் மதுரைச் சிறையிலே அடைபட்டுக்கிடக்கிருன்! சிறைப்பட்ட கடுங்கோனை மீட்கவேண்டும்! நற்றமிழை, பொற்கலையை, பண்பை, நம் வாழ்வைக் காக்க வேண்டும்! நாடு பெறவேண்டும் விடுதலை! நமது போரணியை வலிவும் பொலிவுமாக்குவோம்! வாழ்க தமிழ்!

எல்லோரும்:- வாழ்க தமிழ்!

சிவமாறன்:- வீழ்க பகை!

எல்லோரும்:- வீழ்க பகை!

ஒருவன்:- ஐயா! தமிழ், விடுதலை, தன்மானம்னு சொல்றீங்களே; இதெல்லாம் வயித்துப் பசிக்குச் சோறு போடுங்களா?

சிவமா:- நிச்சயமாகப் போடும்! தோழனே! விடுதலை பெற்ற நாட்டில் மனித உரிமைக்கும், உழைப்புக்கும் மதிப்பிருக்கும்; விலையிருக்கும்; எனவே, வளமிருக்கும்! வயிற்றுக்குச் சோறிருக்கும்!

ஆட்சியிலே நமது மொழி அமர்ந்திருக்கும்; எனவே மொழி வளர்க்கும் புலவர்க்கும், கலைஞர்க்கும் வாழ்விருக்கும்! நீ, படையில் சேர்ந்து வாக்குறுதி எடுத்துக் கொண்டாயோ?

ஒருவன்:- இல்லிங்க! பொறுங்க! எதுக்கும் என் பெண்டாட்டியை ஒரு வார்த்தை கேட்டுட்டு, இதோ வந்திடறேன்.

[வேகமாகப் போகிறான்.]

சிவமா:- நண்பர்களே! கலங்கரை விளக்கத்தையடுத்துள்ள பாழ் மண்டபத்தருகே, ஞாயிறு மாலை மீண்டும் கூடுவோம்! சென்று வாருங்கள் செயலாற்றும் உணர்வோடு!

[எல்லோரும் வணங்கிச் செல்லுகின்றனர். வருகிறான் தளவாய் சேந்தன் வழுதி]

சேந்தன்:- (சந்தேகத்தோடு) ஐயனடியாள்! யாரிவர்கள்? நாட்டின் பிரதம தளவாயாக நான் உயர்த்தப்பட்டதை அறிந்து நல்வாழ்த்துக்கூற வந்தார்களோ?

ஐயன:-இல்லை. நாட்டின் மன்னனாக வீற்றிருக்க வேண்டிய கடுங்கோன், பகைவனால் சிறையிடப்பட்ட வேதனையைப் பரிமாறிக் கொள்ள வந்து போகின்றனர்!

சேந்:- நான் பெற்றுள்ள புதுப் பதவி குறித்து எந்தப்பயலும் கேட்கவில்லையோ? ஐயனடியாள்! இனி நீ பாண்டி மண்டலத்தின் பிரதம தளவாயின் தருமபத்தினி! எத்தகைய உயர்வு பார்த்தனையா?

ஐயன:- நீதிக்குப் போராடி நெடுஞ் சிறையில் வாடுகின்ற பாண்டியன் கடுங்கோனின் தமக்கை என்ற உயர்வே எனக்குப் போதும்!

சேந்:- (சினந்து) ஐயனடியாள்!நான் பெற்ற பெருமை உனக்கே பிடிக்கவில்லையா?

ஐயன:- என் தம்பி பெற்றுள்ள இடுக்கண் மிகப்பெரிது என்கிறேன்!

சேந்:- மன்னனைக் கொல்ல முனைந்த மடையன் இன்னலைப் பெறுவதில் வியப்பொன்றுமில்லை. என்ன வேண்டுமாயினும் நினைத்துக்கொள். எனக்கு அரசாங்கக் கடமை பெரிது! அதன்மூலம் பெறுகின்ற பதவி பெரிது; புகழ் பெரிது! வருகிறேன்!

[உள்ளே செல்கிறான்]

ஐயன:- (தடுத்து) நாதா! நில்லுங்கள். ஒரு வேண்டுகோள்!

சேந்:- (நின்று) என்ன!

ஐயன:- தம்பியைப் பார்க்கவேண்டும் நான். மதுரைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

சேந்:- முடியாது. எனக்குத் துறைமுகப்பணி இருக்கிறது. வேண்டுமாயின் நீ சென்று பார்! பிறகு நான் வருகிறேன்.

[வேகமாகப் போகிறான்]

ஐயன:- சிவமாறன்! எனது மதுரைப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்.

சிவமா:- கட்டளை. தேவி.

[பணிந்து செல்கிறான் சிவமாறன்]

(தொடரும்)

புரையோர் கேண்மை

—[நா. நாராயணன்]—

நற்றிணையிலே காதலர்கள் தகுதி குறித்து மிக அழகான பாடல் ஒன்று உள்ளது. அவன் காதலி வாயிலாகவே அவன் தகுதிகள் கூறப்படுவதாகப் பாட்டு.

கார் காலத்தில் வருவேன் என்று கூறிச்சென்ற அவன் கார் வந்தும் காதலன் வராதிருக்க, வேறு வழியின்றி அவன் காதலி, 'காரே நீதான் பொய்; என் காதலன் மெய்' என்று சொல்லி மனதைச் சாந்திப்படுத்திக் கொள்ளுகிறாளே, அந்த நிலைக்கு என்னை ஆளாக்கமாட்டார் என்னவர். அவர் சொன்ன சொல் தவறாதவர்; அவரது சொல் என்றும் நிற்கும் சொல். அவர் என்மேல் கொண்டுள்ள அன்பு இந்நீள்பரப்பைக் காட்டிலும் பெரிது; வானைக்காட்டிலும் உயர்ந்தது. ஆழ்கடலைவிட ஆழமானது. என்றும், அவர் எனக்கு இனியர். எங்களிடையே துன்பங்காணப் பொறுதலர்.

காதலர் தொடிவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழித் தொடரும் பசலை நோயை நன்கறிந்தவர் அவர். என் இளமென் தோளைத் தன் அகன்ற மார்பகத்தில் சிறைப்படுத்திய அவர், என்றுமே அதனை விடுவித்துப் பிரிவுத் துன்பத்தை அளித்ததில்லை.

கொங்கு தேர் வாழ்க்கைத்தும்பி ஒன்று தூய தாமரை மலர்களில் உள்ள குளிர்ந்த தேனை எடுத்து, பெரிய மலையில் இருக்கும் சந்தன மரத்தில் அடை கட்டினால், அத்தேன் எத்துணை சுவை உள்ளதாயும், தூயதாயும், பயனுள்ளதாயும் இருக்கும்! மலர்களில் தூய மலர், மலைகளில் உயர்ந்த மலை, மரங்களில் சிறந்த மரம். அடை கட்டுவதோ கொங்குதேர் வாழ்வையே தொழிலாகக்கொண்ட தும்பி. அது ஒன்றே கலப்பற்ற தூய நறுந்தேன் ஆகும். அத்தகையரே என்னவரும்.

தாமரை போன்ற தூய உள்ளமும், மலையைப் போன்ற உயர்ந்த எண்ணமும், சந்தன மரம்போன்ற குளிர்ந்த இதயமும் கொண்ட அவர், அத்தேனைப்போன்று இனிமை தருபவர்.

நோய் நீக்கும் அத்தேனைப் போன்று என் உளநோய் நீக்கும் தகைமையர். தூய அந்நறுந்தேன் எவ்வாறு சுவை தருகிறதோ, அவ்வாறே உடலாலும், உள்ளத்தாலும் தூயராகி, மனம் கலந்த என்னை மறவாமலும்' மற்றைய பெண்டிரை மனதாலும் நினையாமலும், கற்பின் நெறிகாத்து நின்று, என் நெஞ்சினிக்கச் செய்கிறார்.

எனவே என்காதலர். வாய்மையர்; தூய்மையர்; வானினும் உயர்ந்தவர், இனியர்; கற்புடைய நெறியர்; கிடைத்தற்கு அரியர்.

என்று இறுமாப்போடும், பெருமிதத்தோடும் நெஞ்சு நிமிர்ந்து பேசுகிறாள் அத்தலைவி. நினைக்குந்தோறும் நினைக்குந் தோறும் நெஞ்சினிக்கச் செய்யும் இப்பாடல் நற்றிணையின் முதற்பாடல்; நற்றமிழின் சுவை தேர்வோர்க்கு நல்ல பாடல்:-

நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தன் தாதுபதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற; புரையோர் கேண்மை.

—நற்றிணை.

★

மஞ்சள் காசு

ரா. சீனிவாசன்

ஆசிரியர் கரும்பலகையில் வெள்ளை அடித்துக் கொண்டிருந்தார். தும்பைப்பூ போன்ற தூய்மையான மடிப்புக் கலையாத ஆடைகளையும் அணிகலன்களையும் சுமந்த அந்தப் பைங்தொடியாளின் பார்வை அடிக்கடி பாண்டியன் அமர்ந்திருக்கும் திக்கு நோக்கியே சென்றது. பாண்டியன் அமலா இருக்கும்திக்குநோக்கித் தன் கழுத்தை வளைத்தான், அவள் தன் நீள் நுதலில் வடியும் வியர்வை முத்துக்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டே பாண்டியனைப் பார்த்தாள்.

அமலா பழத்தோட்டமாகவும், பட்டு ரோஜாவாகவும், காண்போர் கண்களுக்குக் காட்சியளித்தாளேயன்றி, அவள் கடற்பஞ்சுக் கன்னக் கதுப்புகளில் சோகம் கோலமிட்டிருப்பதை எவரும் கண்டதில்லை. ஏதோ ஒரு பெரிய குறை அவள் நெஞ்சில் மரமாக வளர்ந்திருக்கிறது என்பதை அந்த மங்கைக் கூட்டத்தில் எவரும் அறிந்திலர்— பாண்டியனைத் தவிர!

வகுப்பறையில் பாண்டியனைப் பார்ப்பாள். பெருமூச்செறிவாள். அந்தக் கணநேரத்தில் ஏக்கம், சோகம், விரக்தி சில நேரங்களில் புன்னகை எல்லாம் அவள் முகத்தில் பிரதிபலிக்கும். அவள் விழி சிந்துகின்ற பார்வைக்குப் பொருள் காணும் ஆராய்சியில் அவன் தன்னையே ஈடுபடுத்திக்கொண்டான்.

காலம் கரைந்தது: பாண்டியன் கருமமே கண்ணாக இருந்தான். இறுதியில் அவள் நோய்க்கு அவனே மருத்துவனானான், மூலிகையானான். இதுகாறும் பார்வையாலேயே எண்ணங்களைப் பறிமாறிக் கொண்ட அந்தச் சோடி சிட்டுகள் இப்போது நேருக்குநேர் எதிரும்புதிருமாகச் சந்திக்கின்ற நேரங்களில் நெருங்கிக் குசலம் விசாரித்துக்கொள்ளத் தவறுவதில்லை.

அமலாவின் இல்லத்திற்குச் செல்வது அவனது வாடிக்கையான அலுவல்களில் ஒன்றாகிவிட்டது.

பாண்டியன் வரும் வழி நோக்கித் தன் விழியைப் பூக்க மலராக்கிக் கொண்டு நெடுநேரம் அமலா தெருவாயிற்படியில் காத்திருந்தாள். எப்போதும்போலவே பாண்டியன் வீட்டின் உள்ளே நுழைந்தான். இன்முகமும், புன்னகையும் காட்டி வரவேற்றாள். காலணி ஒலி கேட்டு, உள்ளே அமர்ந்திருந்த அமலாவின் அன்னை எழுந்து சென்று வரவேற்றார்கள்.

அமலாவின் அன்னை ஆண்டில் முதியவளாக இருந்தாலும், தன் நெஞ்சை மூடநம்பிக்கைகளுக்கும், அறியாமைக்கும் அடகு வைத்திடும் போக்கினளல்ல. முற்போக்கு எண்ணம் கொண்டவள். எனவே தந்தையை அறியாத அமலாவை அந்த அம்மையார் வீட்டிலேயே சிறைவைக்காது செல்லமாக வளர்த்து வந்தாள்.

பாண்டியனும் அந்த அம்மையாரும் நெடுநேரம் உரையாடினார்கள். ஊர் விஷயங்கள்; உலக அரசியல், இலக்கியம், கல்லூரிவாழ்க்கை இவைகளெல்லாம் அவர்கள் பேச்சில் அடிபட்டன. பேச்சின் இடை இடையே "உன் திருமணம் எப்போது?" என்று அந்த அம்மையார் கேட்டார்கள்.' 'என் திருமணம் பற்றி நான் இதுவரை நினைக்கவே இல்லை." இந்தக் காலத்து இளைஞர்களைப்போல எங்கேயாவது...அந்த அம்மையார் முடிக்கவில்லை. அம்மா அங்ஙனம் என்னை எண்ணாதீர்கள். எத்தகைய பகட்டிற்கும் அலங்காரத்திற்கும் என் நெஞ்சைப் பறிகொடுத்ததில்லை. ஆனால், நீங்கள் விரும்பினால் அமலாவை என் இல்லத்துத் துணைவியாக ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன்." என்று தன் நெஞ்சில் நெருப்பிடை பஞ்சாகப் புகைந்துகொண்டிருந்த எண்ணத்தை தழதழத்த குரலில் வெளியிட்டான்.

அமலாவின் அன்னை ஒருகண நேரம் அமைதியாக இருந்தார்கள். அமலா இருவருக்கும் தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள். சுவை நீரை அருந்திய அந்த அம்மையார் பாண்டியனைஒருமுறை கூர்மையாக நோக்கினார்கள். மணிப்பொறி ஏதோ ஓசை செய்தது

"நேரமாகிவிட்டது, சென்று வருகிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு பாண்டியன் சென்றான்.

முயற்சி சிறிதும் இல்லாமல் கிடைத்த பெருநிதிபோல் பாண்டியன் அந்த அம்மையாரின் கண்களுக்குக் காட்சியளித்தான்.

சூழ இருப்போரின் செவிப்பறைகள் மங்கள ஒலியால் நனைக்கப்பட்டன. தூக்க இயலாத சுமையை இதுகாறும் தான் தன் தலையில் தூக்கிவைத்துக் கொண்டிருந்ததைப் போலவும், அந்தப் பெரும் பொறுப்பிலிருந்து பாண்டியன் தன்னை விடுவித்து விட்டதாகவும் அந்த அம்மையார் எண்ணினார்கள்.

அந்த மன நிம்மதியோடு ஒருநாள் கண்களை இறுக மூடிவிட்டார்கள்.

மணமான ஆறே திங்களில் இரண்டு பிஞ்சு நெஞ்சங்கள் இந்தப் பேரிழப்பைத் தாங்கிக்கொள்கிற அளவுக்குக்கூடப் பக்குவம் பெறவில்லை. அன்னையை இழந்து தவித்த அமலா விழியில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பாண்டியன் காட்டிய வழியில் சென்றாள்.

சலனமற்றிருந்த அவர்கள் நல்வாழ்வில் அடுத்தடுத்துப் புயல்வீசத் தொடங்கியது. அமலாவின் அன்னை வைத்துவிட்டுப்போனசொத்துக்கள் பற்றிய சில சான்றுகள் மிக அவசரமாகத் தேவைப்பட்டன. அலமாரியிலிருந்து எல்லாப் "பைல்களையும்"

எடுத்துப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தவன், ஒரு காகித உறையைப் பிரித்தான். அதன் உள்ளே இருந்து அஞ்சல் அட்டை அளவில் ஒரு புகைப்படம் தரைமீது விழுந்தது. ஆவல் மேலிட அதனை எடுத்துப் பார்த்தான். அடுத்த வினாடி அவன் நெஞ்சம் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையாகிவிட்டது. கீழே சிதறிக்கிடந்த காகிதக் கூளங்களை எடுத்து அலமாரியில் திணித்தான். என்ன காரணத்திற்காக அலமாரியைத் திறந்தானே அந்தக் காரணத்தை அடியோடு மறந்துவிட்டான். சித்தம் குழம்பிய நிலையில் கூண்டில் அடைபட்ட வேங்கையைப்போலக்குறுக்கும்நெடுக்குமாக நடந்தான். விபச்சாரி விலைமாது இவர்களைவிடக் கொடியவள் என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன. கயமையின் முழு உருவாக அமலா அவன் கண்களுக்குக் காட்சியளித்தாள். "ஆத்திரத்திற்கும், அவசரத்திற்கும் அறிவை அடகுவைத்துவிட்டால் சில நேரங்களில் அறியப்படவேண்டிய உண்மைகள் நம் செவிப்புலனைத் தொடாமலேயே சென்றிடக்கூடும்'' என்று ஒரு கண நேரம் எண்ணினான். அன்று முதல் அவளின் அங்க அசைவுகளை ஊன்றிக் கவனிக்கலானான்.

அமலா அவனால் கடுமையான சோதனைக்கு ஆளாக்கப்பட்டாள். அவன் நலம் கருதி அவள் செய்கின்ற எல்லாக் காரியங்களிலும் குறை கண்டுபிடிக்க முயன்றான். அவள் கரம் பட்டாலே எந்தக் காரியமும் கரியாகிவிடும் என்று எண்ணினான். "கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்'' என்று சொல்கின்ற கொடுமைக்கார மாமியார் போல அவளைக் கொடுமைப்படுத்தினான்.

தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக் கானலை நாடி ஓடிய கதையாகிவிட்டதுஅவள் வாழ்க்கை. சூல்கொண்ட மேகம்போல அவளது விழிகள் காட்சியளித்தன. அவள் சிந்திய கண்ணீர் அவன் நெஞ்சத்தை நனைக்கவே இல்லை. தன் துணைவனின் மனமாற்றத்திற்கான காரணத்தை அறிய முயன்றாள். நாட்கள் செல்லச்செல்ல அவள் உடல் நலிந்தது. நெஞ்சில் நிம்மதி இல்லை. உறக்கம் அவளுக்குப் பகையாகி நெடு நாட்களாகி விட்டன. இரவெல்லாம் இருமலோடு போராடிக்கொண்டிருந்தாள். ஒடுக்கு விழுந்த கன்னங்கள், ஒளி இழந்த கண்கள், ஒட்டியமுகம், உலர்ந்துபோன உதடு இந்த உருவோடு காட்சியளித்தாள்.

பாண்டியன் வெளியூரில் தங்கி இருந்தான். தற்செயலாகப் பாண்டியன் அறைக்குள் அமலா நுழைந்தாள். அவன் மேசையின்மீது ஒரு ஆங்கிலச் சஞ்சிகை இருந்தது. அதன் வண்ணமும் பெயரும் அதனை எடுத்துப் பார்க்கும்படி தூண்டின. அதனை எடுத்துப் பிரித்தாள். அதன் உள்ளே ஒரு புகைப்படம் இருப்பதைக் கண்டாள். "இத்தனை ஆண்டு காலமாக என் நெஞ்சக் கதவுகளைத் தாளிட்டுக் கட்டிக் காத்துவந்த இரகசியம் எப்படியோ என் துணைவருக்குத் தெரிந்துவிட்டதே'' என்று துணுக்குற்றாள். "என்னதான் அவரெதிர் நின்று என் புனிதத் தன்மையை எடுத்துக் கூறினாலும் அவர் மனம் மாறவே மாறாது'' என்ற முடிவுக்கு அமலா வந்தாள். இறுதியில் தன்நிலையை விளக்கி, அவனிருப்பிடம் அறிந்து ஒரு மடல் தீட்டினாள்.

வெளியூரில் தங்கி இருந்த பாண்டியனிடம் அன்றைய அஞ்சலில் அவன் முகவரிக்கு வந்த கடிதம் சேர்ப்பிக்கப்பட்டது. முகவரியைக் கண்டதும் இது அமலாவின் கையெழுத்து என்று எண்ணி மிகுந்த வெறுப்புணர்ச்சியோடு படிக்கத் தொடங்கினான்.

அன்புள்ள அத்தான்.

நலம் வேண்டுகிறேன். விரல்விட்டு எண்ணக்கூடிய இன்னும் சில நாட்களில் அல்லது சில வினாடிகளில் உங்கள் இல்லத்துத் துணைவியின் மூச்சு நின்றுவிடும். நிலமையைத் தெளிவு படுத்தவும், எனக்கு நானே கழுவாய் தேடிக்கொள்ளவும் இந்த மடல் தீட்டலானேன். தன் மனைவி அயலான் ஒருவனோடு ஒருசேரக் கரங்கோர்த்து நிற்கின்ற காட்சியைக் கண்டு தன் உள்ளத்தை எந்தக் கணவனும் திறந்துகாட்ட மாட்டான் என்பதை நான் நன்கு அறிவேன் நம் வாழ்வில் புயல் புகக் காரணமான நிகழ்ச்சியை நீங்கள் சொல்லாமலேயே நான் அறிந்து கொண்டேன். தற்செயலாக ஒரு நாள் தங்கள் அறைக்குள் சென்ற நான், தங்களால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட புகைப்படத்தைக் கண்டேன். அந்தப்படத்தில் எனக் கருகில் இருப்பது என் கணவர் தான். அதிர்ச்சி அடையாதீர்கள். இந்த அபாக்கியவதியின் சோகக் கதையைக் கேளுங்கள்.

திரைகடலோடித் திரவியம் தேட என் தந்தை சிங்கப்பூருக்குச் சென்றார். தான் வேலைபார்த்து வந்த வெள்ளை அதிகாரியிடம் வெள்ளை உள்ளத்துடன் நடந்து, அவரது நன்மதிப்பைப் பெற்றார். அவரது நல்லெண்ணமும், கடுமையான உழைப்பும் அவர் உயர் பதவிகளை எட்டிப்பிடிக்க ஏணியாக அமைந்தன. செல்வம் வந்தகாலை கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் ஒரு கணநேரம் ஆராய்ந்து பார்த்தே எந்தச் செயலிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இத்தகைய சீரிய பண்பால் ஆளம்பு, கார் எழிலான மாளிகை ஏற்றமான வாழ்வு எங்களைத் தேடிவந்தது. இத்தனை ஏற்றத்துடன் இருந்த குடும்பத்தில் பிள்ளைக்கலி தீர்க்க நான் வந்தேன்.

சீரார்பைங்கிழியே! செந்தமிழே! முக்கனியே என்றெல்லாம் சீராட்டித் தாலாட்டி வளர்க்கப்பட்டேன். காலம் கரைந்தது. இயற்கை எனக்கு எழிலையும், என் தந்தையின் உழைப்புச் செல்வத்தையும் கொடுத்தது. தொடக்கக் கல்வி! உயர்தரக் கல்வி எல்லாம் முடிந்து கல்லூரியில் சேர்வதற்காகக் காத்திருந்த சமயம், எங்கள் இல்லம் நோக்கிப் பெண்கேட்டுப் பலர் வந்தார்கள். இறுதியாக ஒருவர் வந்தார். கட்டழகும், திண்தோளும் கொண்ட அவர் ஒரு பெரிய விமானக் கம்பெனியில் விமானமோட்டியாகப் பணிபுரிபவர். அவரது அடக்கமும், பேச்சின் இனிமையும் என் பெற்றோரின் நெஞ்சங்களைக் கவர்ந்தன. அடுத்த கிழமையே அவருக்கு நான் கடிமணம் செய்துவைக்கப்பட்டேன். அவரும் நானும் கும்பிடும் கரம்போலக் கூடியிருந்தோம். ஆனந்தமாக இருந்த எங்கள் வாழ்வு கணநேரத்தில் பளிச்சிட்டு மறையும் வானவில்லின் வண்ண வேடிக்கை போல் ஆகுமென்று நானோ அல்லது அவரோ எண்ணவில்லை.

ஒரு நாள் வழக்கம்போல் வேலைக்குச் செல்லும்பொழுது என்னிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார். நானும் வாசல்வரை வந்து புன்னகையால் விடைதந்து அனுப்பினேன். மறுநாள் இரவு அவர் இயக்கிச் சென்ற ஊர்திப் பொறிகளில் ஏற்பட்ட கோளாறுகளினால் விபத்துக்குள்ளாகிவிட்டதாகவும்; மிகுந்த ஆபத்தான நிலையில் என் கணவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சேதி வந்தது. காணும் என் பெற்றோரும் அழு

தோம், புலம்பினோம், கதறினோம். அடுத்த வினாடியே நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். சில்லிட்டுப்போன சீர்குலைந்த அவரது உடலைத்தான் எங்களிடம் தந்தார்கள்.

மணமாகிய ஆறே திங்களில் இத்தகைய கடுமையான சோதனையை நாங்கள் சந்திக்க நேரிட்டது. அப்போது எனக்குப் பதினாறுவயது தான். வெளியுலகத்து அனுபவம் தினையளவுகூட எனக்கு இல்லை. மங்கலான கண்ணாடிபோல், ஒளியற்ற முகத்தினளாய் விரிந்த குழலோடு, விம்புகின்ற இதயத்தோடு பூவும், பொட்டும் இழந்தவளாய் இந்த உலகத்தின் முன்னே நான் காட்சியளித்தேன். ஆற்றுவாரில்லை, தேற்றுவாரில்லை. எனது இந்தக் கோலம்கண்டு என் தந்தையின் நெஞ்சம் நைந்தது. அது சமயம் வணிகத்துறையில் ஏற்பட்ட தளர்ச்சி அவரது உடலைத் தளரச் செய்தது. நாளடைவில் அவரும் என் கணவர்வழி சென்றுவிட்டார். கொஞ்சக் காலத்திற்குப் பிறகு சிங்கப்பூர் வாசம் என் அன்னைக்குக் கசந்துவிட்டது. என் கணவர் பணியாற்றிய விமானக் கம்பெனி ஒரு பெருந்தொகையை என் கணவரின் இழப்புக்காக வழங்கியது. அதனைப் பெற்றுக்கொண்டு ஊர் வந்தடைந்தோம்.

சிந்தையை அடக்கிக்கொண்டு வாழவிருப்பதென்பது இயலாத காரியம் என்பதை உணர்ந்த நான், என் அன்னையின் இசைவைப்பெற்று கல்லூரியில் சேர்ந்தேன் கல்லூரியின் உள்ளேயும் — வெளியேயும் உள்ளவர்களின் வாய்க்குத் தாள் போடுவதற்காகவே நானும் எனது சக மாணவிகளைப்போலகொண்டை விழிக்கு மையும் கொண்டைக்குப் பூவும் வைத்துக்கொண்டேன். என் எழில் பலர் கண்களுக்கு விருந்தாய் அமைந்தது. என் கரம்தீட்டும் கடிதத்தைப் பெறத் துடித்தனர் கல்லூரிக் காளையர் பலர். அனுதினமும் கல்லூரி முடிந்ததும் என இல்லத்து வாசல்வரை வந்து திரும்புவர் சிலர்.

கல்லூரிப் பாடத்தின் சுமை அதிகரிக்க அதிகரிக்க, கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்தினாலன்றிக், கற்றுத்தேர்வது மெத்தக் கடினம் என்று எண்ணி, நேரம், நினைப்பு, செயல் எல்லாவற்றையுமே என கல்விக்காகச் செலவிட்டேன். அங்ஙனமிருந்தும் சில நேரங்களில் ஆசாபாசமும், சபலமும் என் நெஞ்சக் கதவுகளைத் தட்டின. சமுகத்தின் முன்னே தொழுநோய்க்காரன் போலிருக்கும் எனக்கு இது ஒரு கேடா என்றெண்ணி,"சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று தன்வழியே சென்ற நரிபோல் நானும் எந்த எண்ணத்தையும் என் நெஞ்சில் வளரவிடாது முள்மரத்தை முளையிலேயே கிள்ளி எறிவதைப்போல் வளரவிடாதிருந்தேன். இருந்தும் நான் இறுதியில் தோற்றுப் போனேன். என்னையுமறியாமல் என் இதயத்தில் நீங்கள் இடம் பெற்றுவிட்டீர்கள். பிறகு நடந்ததெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

"இவைகளையெல்லாம் நீயும், உன் அன்னையும் ஏன் என்னிடம் கூறுது மூடி மறைத்தீர்கள்?" என்று நீங்கள் நெற்றியைச் சுருக்குவீர்கள். என் வாழ்வு நல்வாழ்வாய் அமையவேண்டும் என்று எண்ணியே என் அன்னை இதனைத் தங்களிடம் கூறவில்லை.

மெத்தப் படித்தவர்கள். முற்போக்கு, முன்னேற்றம் என்று முணுமுணுப்பவர்கள், 'வீடு திருந்தினால் தான் நாடு திருந்தும்' என்று நெஞ்சை நிமிர்த்தி மேடையதிரப் பேசுகின்ற இன்றைய இளைஞர் கூட்டம் பெரும்பாலும் தங்கள் சொந்த வாழ்க்கையில் ஆபரணத்தையும், பணத்தையுமே தேடியலைகிறது. அழகுக்கு இலக்கணமாகப் பெண் இல்லாவிட்டாலும், சராசரி அழகும், பண்பு நலனும் அமையப் பெற்ற குணவதியொருத்தி எனக்குத் துணைவியாக வாய்த்தால் போதும் என்று இன்றைய இளைஞர் கூட்டம் திருப்தியடைவதில்லை. தன்னைத் துணைவனாக ஏற்றுக்கொள்ளும் பெண்ணைப்பற்றி அறிந்துகொள்வதைவிடத் தனக்கு வாய்க்கும் மாமனார் எத்தனை வேலிக்குச் சொந்தக்காரர்? இரும்புப் பெட்டியில் இருப்பு எவ்வளவு இருக்கும்? கஞ்சப்பிரபுவா? அல்லது கரும்புத் தோட்டத்துக்குச் சொந்தக்காரரா? என்றுதான் எண்ணுகிறார்கள்.

ஏழை வீட்டில் பிறந்தவருக்காவது எளிதில் கணவன் கிடைக்கிறது. கடிகாரத்துப் 'பெண்டுலம்' போல நிலையற்ற வாழ்வு நடாத்தும் நடுத்தரக் குடும்பத்தில் பெண்ணாக வந்துதித்தவர்கள் துளிர் பழுப்பாகி, கருகிச், சருகாகி மடிவதைப்போல நாளுக்கு நாள் விம்மி விம்மி வேதனையால் தலையணையைக் கண்ணீரால் நனைக்கின்ற கொடுமையை நீங்கள் அறியாதவரல்ல. எழிலும் எடுப்பும் இருந்தும் இல்லாமையால் களர் நிலத்தில் விதைத்த விதையாகக் காரிகையர் பலர் ஒவ்வொரு இல்லந் தோறும் காட்சியளிக்கின்றனர்.

இந்த நிலையில் என்போன்ற ஒரு கைம்பெண்ணை மணக்க யார் முன் வருவார்கள். அமலா ஓர் அமங்கலி! சமுகத்துக்கோர் அபாய அறிவிப்பு! சீந்துவாரற்ற மஞ்சள் காசு! என்று இந்த சமுகத்தின் முன்னே என் தாயால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால், நான் காடுசெல்லும் வரை வெள்ளைத் துகில் உடுத்து விரிந்த குழலோடு நகை இழந்த முகத்தினளாய், வீட்டில் உள்ள நான்கு மூலைகளில் ஏதாவது ஓர் மூலையில் முக்காடிட்டு அமர்ந்திருக்க நேர்ந்திருக்கும். நாளடைவில் நெஞ்சில் கயமை வளரவும், கள்ளச் சோரம் போகவும் அது வழிவகுக்கும்,என்று அஞ்சியே இந்தச் சேதியை என் அன்னை எவரிடமும் கூறவில்லை.

கனி குலுங்கும் மரம். தன் கண்ணுக்குப் பிறகு பாதுகாப்பு மிகத் தேவை இல்லாவிடில் கயவர் கல்லெறிவர் என்று எண்ணியே இத் திருமணத்தை என்அன்னை ஏற்பாடு செய்தார்கள்.

என் நெஞ்சத் தூய்மைக்கு மாசு கற்பிக்காதீர்கள். நெஞ்சும் நாவும் வேறுபட என்றும் நடந்ததில்லை. 'சாவூர்' என்னை அழைக்கிறது செல்கிறேன்.

இங்ஙனம்,

அமலா.

"கதை முடிந்தது" என்று பெருமூச்சுவிட்டான் பாண்டியன், கடிதத்தை தன் கால்சட்டையில் வைத்துக்கொண்டு தன் கால் சென்ற வழியே சென்றான்.

செந்தாமரை

க. இராசன்

அன்று சனிக்கிழமை. பிற்பகல் வேளை. பளிச்சென்று வெயில் காய்ந்துகொணடிருந்தது. முந்திய நாலைந்து நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையின் போதெல்லாம் நெஞ்சியாற்றில் வெள்ளமில்லை. சும்மர் முழங்கால் அளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அன்று நண்பகல்வரை சிறுவர்களும், — தள்ளாதவர்களும் கூட ஆற்றைக் கடந்து பக்கத்திலுள்ள வில்வநல்லூருக்குப் போய்க் கொண்டும், அங்கிருந்து வந்து கொண்டுந்தான் இருந்தார்கள்.

வரதன் ஆற்றின் நீரோட்டத்தை உற்று நோக்கியவண்ணம் மேட்டிலிருந்த நாவல் மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான். மெல்ல, மெல்ல அவன் கண் முன்னால் நீரின் வேகமும், அளவும் பெருகிக்கொண்டு, பெருகிக்கொண்டே வந்தது. அரை மணிநேரத்துக்குள் வெறும் நீரோட்டம் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்துவிட்டது. நாலுகல் தொலைவிலுள்ள உசுட்டேரி நிரம்பிவிட்டது போலும்! தண்ணீரை இந்தப்பக்கம் திறந்துவிட்டிருக்கிறார்கள்.

திடீரென்று பெரும் கூக்குரல் கேட்டது. ஆற்றுக்கு அக்கரையிலுள்ள மாந்தோப்பருகிலிருந்து அந்தக் கூக்குரல் வந்தது.

“ஐயோ, வெள்ளத்தில்போகிறாள்! வெள்ளத்தில் போகிறாள்!” என்று நாலைந்துபேர் கத்திக் கூச்சல் போட்டார்கள்.

அந்த வெள்ளப்பெருக்குக்கு அஞ்சாமல் சட்டென்று வரதன் ஆற்றில் குதித்துவிட்டான். அந்த வெள்ளம் வரதனை இழுத்து அலைக்கழிக்கத் தொடங்கியது. அதன் ஆற்றல் அந்தவேளை பேராற்றல்; காட்டாற்றல். ‘ஐயோ, வேகத்தைத் தெரிந்து கொள்ளாமல் நான் வந்து மாட்டிக் கொண்டுவிட்டேனே!’ என்று அவன் திணறித் தடுமாறித் தவிப்பதற்குமுன் அந்த வெள்ளம் அவனை வேகமாக அடித்துத் தள்ளிக் கொண்டு போயிற்று. அதன் போக்குக்கும், ஆற்றலுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் அஞ்சி ஒடுங்கியவனாகி வெள்ளத்தோடு வெள்ளமாகச் சென்று வெள்ளத்தில் சிக்கிய அந்த மற்றொரு உயிரை எப்படியோ பற்றிககொண்டுவிட்டான். அவன் என்றுமே அப்படியொரு தாளாண்மையில் ஈடுபட்டது கிடையாது. ‘இனி மீளமுடியாது. வெள்ளத்தில் சிக்கியவளும் போய்விடுவாள். நானும் அவ்வளவுதான்’ என்று நம்பிக்கை இழந்த நிலையில் சாவின் விளிம்பிலே நின்று போராட்டம் நடத்திக்கொண்டிருந்தான் வரதன்.

அவன் நினைத்தபடி இருவர் வாழ்வும் அப்போதே முடிந்துதான் போயிருக்கும். ஆனால் இயற்கையின் பெருவலி எண்ண முடியாத, எதிர்பார்க்க முடியாத செயலாற்றல் உடையதாயிற்றே!

மூச்சுத் திணறி, கைகால் சோர்ந்து, நினைவு மாறப்போகும் சமயம் சட்டென்று தரை தட்டியது. ஆமாம்,சூழ்ந்து,நிறைந்து.விரைந்து பெருகியோடும் வெள்ளத்தை முந்திக்கொண்டு நின்றது அங்கே ஒரு திட்டு. அது கரைக்குச் சற்றே எட்டி இருந்தது. தன்னுடைய கடைசி முயற்சியாம் பெருவலியோடு வெள்ளத்தில் சிக்கிய மற்றொரு உயிரையும் கை நழுவவிடாது பற்றிக்கொண்டு அந்தத் திட்டில் ஏறி நின்றுகொண்டான் வரதன்.

விரைவில் ஊர் கூடிவிட்டது — ஆற்றங்கரையில். தன்னைச் சமாளித்துக்கொண்டு, தான் காப்பாற்ற நினைத்த மற்றொரு உயிரையும் கையில் பிடித்துக்கொண்டு, மறுபடியும் வெள்ளத்தில் வீழ்ந்து சிக்கிக் கொள்ளாமல் திட்டின்மீது ஊன்றி நிற்பதற்கே முடியாத நிலையில் தவித்துத் தத்தளித்தான் வரதன்.

அவ்வேளை துணிச்சல் நிறைந்த இளைஞர் சிலர் வெள்ளத்தில் குதித்துத் திட்டை நோக்கி வந்தார்கள். ஆனால். அவர்கள் வந்தடையும்வரை வரதன் காத்திருக்கவில்லை. தன் நினைவு இழந்துவிட்டான் அவன். எப்படியோ வரதன் காப்பாற்ற நினைத்த உயிர் காப்பாற்றப்பட்டது. அவனும் வெள்ளத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டான் பேச்சு மூச்சற்ற நிலையில்.

மறுபடியும் வரதன் கண்விழித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தபோது வீட்டில், கட்டிலில் சுகமாகப் படுத்திருந்தான்.

“ஐயோ, போகப் போகிறானே என் பிள்ளை! இந்த நாசகாரியைக் காப்பாற்றப் போனதால் என் பிள்ளையின் உயிரே போகப் போகிறதே! ஐயோ, திருவுளமே! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!” என்று தன் அன்னை அடித்துக்கொண்டு கதறுகின்ற ஒலி மெல்ல மெல்லச் செவியிற்பட்டது வரதனுக்கு.

“பயப்படாதே அம்மா! இதோ உன் பிள்ளை கண்ணைத் திறந்து பார்த்துவிட்டான்” என்று பக்கத்

தில் நின்ற ஒருவர் கூறுவதும் வரதன் காதிற் பட்டது.

அவன் தலைமாட்டுப் பக்கமாக நின்றாள் அவன் அன்னை மாலை மாலையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டு. அந்தக் கண்ணீர் மாலைக் கிடையே திடும் என்று அவள் வதனம் புன்னகையை மலர்த்திக்காட்டுவதைக் கண் திறந்ததும் கண்டான் அவன்.

"பிழைத்துக் கொண்டாயாடா தம்பி" என்று உரக்கக் கத்திக் கொண்டு வரதன்மீது கைவைத்து அப்படியே அவனை அணைத்துக் கொண்டாள் அவள். காட்டாற்று வெள்ளத்தைத் துச்சமாக எண்ணிய வரதனுக்கு அன்னையின் அன்பு வெள்ளத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சுற்றிலும் நின்றோர் தம் வசமிழந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

தானாகவே வரதனின் பார்வை கால்மாட்டுப் பக்கமாகச் சென்றது.

'யார் அது? செந்தாமரையல்லவா!–அவள் ஏன் இங்கு வந்தாள்?'

"இந்தப் படுபாவிச் சிறுக்கியாலேதான், இந்த விளங்காத வெட்டியாலேதான் உன் உயிரே போகப் பார்த்ததடா தம்பி."

வரதனின் அன்னை திரும்பவும் கதறும் ஒலியில் கூறினாள்.

'ஓகோ, வெள்ளத்தில் சிக்கிக் கொண்டது செந்தாமரையா!'

*

வெயில் கொளுத்தும் கோடை காலம். காலை வேளை. பெரு மணற் பரப்பின் நடுவே சிற்றோடையாக மாறி ஓடிக்கொண்டிருந்தது செஞ்சியாறு. அந்த ஓடையின் இருமருங்கிலும் மண்டிக் கிடக்கும் கோரை, அதன் ஊடே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பூத்து நிற்கும் கருங்குவளை மலர்கள். அந்த மலர்களின் இடையே மிதக்கின்ற பரு மலர்களாகச் சுற்றிச் சுற்றி நீந்திக் கொண்டிருக்கும் நீர்க் கோழிகள். அவற்றிலெல்லாம் தென்பட்ட கலைக் காட்சியினைச் சுவைப்பவனாகி அங்கே அந்த நாவல் மரத்தடியில் நின்று கொண்டிருந்தான் வரதன்.

அவ்வேளை "அண்ணா" என்றது ஒரு குரல் பக்கவாட்டிலிருந்து.

திரும்பினான் வரதன்.

இடுப்பில் சுமந்த குடத்தோடு மலர்ச்சியோ வேதனையோ இல்லாததொரு வெற்றுப் பார்வையோடு அங்கே நின்றுகொண்டிருந்தாள் செந்தாமரை.

"ஏனம்மா?"

"எங்கண்ணாவும், நீங்களும் எவ்வளவு அந்நியோந்யமாக இருந்தீங்க! அவர் போன பிறகு......"

மேலே அவளைப் பேசவொட்டாமல் தொண்டை அடைத்துக் கொண்டுவிட்டது. கண்களை நீர்த் துளிகள் ஏந்தின. பாவம் அவள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் பிரெஞ்சு இராணுவத்தில் சேர்ந்து, அவர்கள் தரும் கொழுத்த சம்பளத்தின் மீது ஆசைவைத்து வியட்நாம் போனவன்தான் இந்தசெந்தாமரையின் ஒரே அண்ணன், வரதனின் உயிர் நண்பன்—மாசிலாமணி. தன் ஒரே தங்கையையும், அன்னையையும் இங்கே தவிக்கவிட்டுப் போவதாக எண்ணிக்கொண்டோ, அல்லது அவர்கள் தவித்துப் புழுங்க நேரிடும் என்று எதிர்பார்த்தோ போருக்குப் போகவில்லை அவன். மாறாக, போருக்குச் செல்வதன் மூலம் பேரோடு, பெரும் பொருளோடு விரைவில் திரும்பலாம். அதன் மூலம் தன் குடும்பத்திற்கு வளமான வாழ்வை உண்டாக்கிவிடலாம் என்ற ஆசையோடுதான் போனான். ஆனால், மறுபடியும் இந்தத் தமிழகத்து மண்ணை மிதிக்கும் பேற்றை அவனால் பெறமுடியாமலே போய்விட்டது. சண்டைக்குப் போனவன் சண்டையோடு போயே போய்விட்டான்.

பிரெஞ்சு அரசாங்கம் என்னவோ இந்த ஏழைத் தாய்க்கும், தங்கைக்கும் கருணையோடு பெரும் பொருள் வழங்கத்தான் வழங்கியது. அந்தப் பெரும் பொருள் மாசிலாமணிக்கு ஈடாகிவிடுமா என்ன?

"இப்போது என்னம்மா வந்துவிட்டது? ஏன் கலங்குகிறாய்?" என்று தான் கலங்குவதை மறைத்துக்கொள்ள முயன்றவனாகத் தன் கண்களைத் துடைத்துவிட்ட வண்ணம் வினவினான் வரதன் செந்தாமரையைப் பார்த்து.

"வேறொன்றுமில்லை. எனக்கு..." மேலே பேசமுடியாமல் நாணம் தடுக்கத் தலைகவிழ்ந்து கொண்டாள் செந்தாமரை.

அப்போதுதான் நினைத்துக் கொண்டவன்போல் "ஓ, உன் திருமணமா? அதற்கு வராமல் இருப்பேனா அம்மா..."

"வந்தால் போதாது அண்ணா, நீங்களே முன்நின்று எல்லாவற்றையும் நடத்தித் தரவேண்டும். அதோடு..."

"அதோடு?"

"அவர்கூடப் பிரெஞ்சுப் படையில் சேர்ந்தவர்தானாம். இப்போது வியட்நாமிலிருந்துதான் வந்திருக்கிறாராம். திரும்பவும் அவர் சைகோனுக்குப் போகாமல்......"

"ஓ, அப்படியா செய்தி?"

வரதன் சற்றுத் திகைத்தான்.

"என்னவோ, என்னால் முடிந்த மட்டும் சொல்கிறேன் உனக்குக் கணவனாக வரப்போகிறவனிடம். ஆனால் ஒன்று. சண்டைக்குப் போகின்றவர்கள் எல்லாம் சாகப் போகின்றவர்கள் அல்லர். ஊரில் அமைதியான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் எல்லாம் எப்போதுமே வாழ்ந்துகொண்டே இருக்கப்போகின்றவர்களும் அல்லர்."

வரதன் பெரியதொரு தத்துவத்தை எடுத்துச் சொன்னான், தான் சொல்வது இன்னதென்று தெரியாமலே. இங்கே செந்தாமரைக்கு அது புரிந்ததோ, புரியவில்லையோ, அவள் ஆசைக்கும், வாழ்க்கைக்கும் அந்தத் தத்துவம் மிகமிக அப்பாற்பட்டது.

செந்தாமரை பேசாமல் வரதனை நோக்கிக்கொண்டிருந்தாள். வரதன் செந்தாமரையைப் பார்த்துக்கொண்டிருப்பவனைப்போல் தென்பட்டாலும் அவன் எண்ணம் வேறெங்கோ ஓடிக் கொண்டிருந்தது.

'கலுக்' என்று யாரோ பெண்டிர் இருவர் சற்றுத் தொலைவில் நின்று

17-வது இதழ் விற்பனையாகிறது!

படித்தீர்களா?
தி.மு.க. வார இதழ்
முன்னேற்றம்
ஆசிரியர் : டி.டி.அரசு
விலை 13 காசு
முன்னேற்றம் - சென்னை-2

நகைக்கும் ஒலி கேட்டது. அந்த ஒலி வரதனின் எண்ணப்போக்கை மாற்றி அதன் பக்கம் இழுத்துக் கொண்டு போயிற்று.

'ஏன் அவர்கள் சிரிக்கிருர்கள்? அந்தச் சிரிப்பென்ன கேலிச் சிரிப்பா, கவடச் சிரிப்பா? அல்லது இரண்டு மற்ற வெற்றுச் சிரிப்பா?'

ஐயம் அழுத்தியது வரதனின் நெஞ்சை. மெல்ல நகர்ந்தான் அவன். செந்தாமரையும் சென்ருள்.

செந்தாமரையின் திருமணம் இனிதே நடந்தேறியது. ஆனல், செந்தாமரை கேட்டுக்கொண்டபடி, அவள் கணவன் சைகோனுக்குப் போவதை வரதனல் தடுக்கமுடியவில்லை. இராணுவ காரியமாயிற்றே! இராணுவச் சட்டமாயிற்றே! ஒரு தடவை மனப்பூர்வமாக ஒப்பந்தம் செய்துகொண்டு பிறகு அதிலிருந்து விடுபட முடியுமா என்ன?

செந்தாமரையும், — அவளுக்கும், அவள் கணவனுக்கும் வேண்டியவர்களும், எல்லாவற்றிற்கும் மேலாக வரதனும் என்ன நடக்ககூடாது என்று எதிர்பார்த்தார்களோ, அது நடந்துவிட்டது. ஆனல், அவ்வளவு விரையில் நடக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. சைகோனுக்குப் போனவன் போனவனே! அண்ணன் சென்றவழி செந்தாமரையின் கணவனும் போய்விட்டான்.

திரும்பவும் அந்தக் காட்சியை வரதன் தன் மனக்கண்ணல் காண்கிருன்:

அதோ அந்த ஆற்ருேரத்து நாவல்மரம். எதிரிலே இடுப்பிலேந்திய குடத்தினளாய்ச் செந்தாமரை. அதோ அவளைச் சகோதர அன்போடு பார்த்துக்கொண்டிருக்கிருன் அவன். அங்கே அவன் காதில் வந்து மோதுகின்ற அந்தச் சிரிப்பொலி — பெண்டிர் இருவர் பின்னலிருந்து சிரிக்கும் சிரிப்பொலி.

ஆனல், அந்தச் சிரிப்பொலி ஏன் என்ற ஐயம் இப்போதில்லை. அது அகன்றுவிட்டது. அன்று அது என்ன பொருளில் ஒலித்தது என்று இப்போது தெளிவாகப் புரிந்துவிட்டது வரதனுக்கு. அது ஏளனச் சிரிப்பொலி.

திரும்பவும் தன் கால்மாட்டில் நின்ற செந்தாமரையை ஏறிட்டு நோக்கினன் வரதன். உடனே ஏனே அவன் கண்கள்தாமே மூடிக் கொண்டுவிட்டன.

★

பர்மாக் கடிதம் ....

ஐயா,

இன்று நம் நாட்டில் தனிப்பெரும் கட்சியாக, "காங்கிரஸ்" இயங்கி அரசோச்சி வருகின்றது. சுதந்தரம் கிடைப்பதற்கு முன் இயங்கிவந்த காங்கிரசுக்கும், இன்றைய காங்கிரசுக்கும், சகல துறைகளிலுமே வித்தியாசம் காணக் கிடக்கின்றது. அன்றைய தலைவர்களின் உள்ளத்தில், அன்பு, தியாகம் யாவும் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அத்தனையும் இன்று மாற்றமே. தட்டிக் கேட்பாரற்ற நிலையிலே அவர்கள் சண்டப்பிரசண்டர்களாகி விட்டனர். அவர்கள் போக்கும், பேச்சும் அகங்காரத்தின் இருப்பிடங்களாகிவிட்டன. இத்தனையும் இன்று நாடு காணும் உண்மை.

சுதந்தரத்திற்குமுன்,கிராமப்புறங்களில் பணியாற்றி, பல தொல்லைகளுக்கும் இலக்காகிய பல்லாயிரக் கணக்கான தேசத் தொண்டர்களில் நானும் ஒருவன். கால மாறுபாட்டால் வாழ வழியின்றி---குடும்பச் சுமை தாளாது இந்நாடு வந்தேன்---கடல் கடந்தேனும் குடும்பத்தைக் காப்பாற்றலாம் என்ற நப்பாசையால். வெளிநாட்டவர் ஒவ்வொருவரும் முன்பெல்லாம் அவர்களின் குடும்பத்திற்கு 40 ரூபாய் மணியார்டரில் அனுப்ப அநுமதிக்கப்பட்டு வந்தது. நாளடைவில் 30 ஆக மாறி 20ல் நின்றது. அதுவும் இப்பொழுது கடந்த 10 மாதங்களாகத் தடைப்பட்டுவிட்டது. இதுபற்றி இந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, ஒரு சுமுகமான தீர்வு காண நம் நாட்டுத் தலைவர்களுக்கு மனமில்லையா, அல்லது கடல்கடந்த நம்மவர்கள்மீது கருணை இல்லையா என்பது எங்கட்குப் புரியவில்லை. இச்சிறு தொகை, இந்தியாவில் உள்ள குடும்பங்கட்கு அனுப்பப்பட்டு வந்ததானது, கால்வயிற்றுக் கஞ்சியேனும் குடித்து உயிர்வாழ ஏதுவாயிருந்தது. இதுவும்முடியவில்லையென்றல்,இதை எதிர்பார்த்து வாழ்ந்துவரும் எம்போன்றோரின் குடும்ப நிலை என்னகும் என்பதைத் தாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

இரண்டு இலட்சத்திற்கு அதிகமான இந்தியர்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டவர்களே.

இங்கும் தமிழன் மனிதப் பண்போடு நடத்தப்படுவதில்லை. விலங்கினங்களுக்காவது ஓரளவு மதிப்பு உண்டு. தமிழனுக்கு அதுவும் இல்லை. இந்தவித அவல நிலையிலும், தம் நாட்டில் உள்ள தன் குடும்பம் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் ஓய்வில்லாதுழைத்துப் பெற்ற ஊதியத்தில் ஒரு சிறு பகுதிகூட அனுப்ப முடியவில்லையே என்று கண்ணீர் வடிப்பவன் தமிழனகத் தானிருக்கிருன்.

கடல் கடந்து வாழும் எம்போன்றோர்களின் அவல நிலைபற்றிக் காங்கிரஸ் பெருந்தலைவர்களிடம் முறையிட்டால், ஏன் வெளிநாடு செல்கின்றீர்கள்? என்று வினவுகின்றனர். இவ்வினு அவர்களின் அறியாமையால் எழுந்ததா? அல்லதுஅகங்காரத்தால் எழுந்ததா; தாய், தந்தை, மனைவி, மக்களை விட்டு---அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பால் உந்தப்பட்டு---கடல் கடந்து வந்தும் கலங்கி வாடும் எம்போன்றோர்களை மேற்கண்டவாறு கேட்பதற்குமுன்,ஒன்றினைச் சிந்திக்க அவர்கள் தவறிவிடுகின்றனர். 20ரூபாய் வருவாய்கூடத் தமிழ் நாட்டில் கிடைக்காது, துன்ப நெருப்பால் சுடப்பட்டு, இங்கு ஓடிவந்து வறுமையை ஓட்டமுயலும் அபலைகள்தான் இந்தத் தமிழர்கள் என்பதை அவர்கள் எண்ணிப்பார்த்திருப்பார்களாயின்---தமிழன் என்ற உணர்வு அவர்கள் உள்ளத்தில் தோன்றியிருக்குமானல் --- இவ்வித அர்த்தமற்ற கேள்வியை அவர்கள் எழுப்புவார்களா?

வடவர்களுக்குத்தான் தென்னவர்கள்மீது நல்லபிமானம் இல்லை. இராஜஸ்தான் பாலைவனத்தைச் சோலைவனமாக்கிய நேரு சர்க்கார் திராவிடர்களாகிய நமது பகுதியிலும் அத்தகைய பசுமையை உண்டாக்க முடியாதா என்ன? முடியும், மனமிருந்தால். அதுதான் இல்லையே! காங்கோவுக்காகக் கண்ணீர் வடித்த நேரு, இலங்கைத் தமிழர்பற்றி ஒருவார்த்தை சொன்னதுண்டா? பாகிஸ்தான் அகதிகளுக்காகக் கோடிக் கணக்காய்ச் செலவு செய்யும் நேரு சர்க்கார் பர்மா, இலங்கை அகதிகளுக்கு என்ன செய்திருக்கின்றது? தமிழ்நாட்டுத் தலைவர்கள்தான் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்? என் உள்ளக் குமுறல் இதையெல்லாம் எழுதத் தூண்டுகின்றது.

20 ரூபாய்கூட அனுப்ப இயலாது தவிக்கும் இப் பர்மா வாழ் தமிழ் மக்களின் உள்ளக் குமுறலை மக்கள் சபையில் எடுத்தியம்பி சுமுகமானதோர் நல்ல வழியை வகுத்து, ஏழ்மையே அணிகலனய்க் கொண்டு வாழும்எம்போன்றோர்களின் குடும்பம் நல்வாழ்வு வாழ ஏற்றதோர் வழியைச் செய்யவேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மைத் தம்பி,
செ. திருப்பதி.

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"சோமாலியா"

[நிலவழகன்]

நாகரிகம் தலைதூக்கி நிற்காத காரணத்தால்—நாகரிக முன்னணியில் நிற்கிற மற்றைய நாடுகள்; இது பிற்போக்கான நாடு என ஒதுக்கித்தள்ளிய நாடுதான் இன்று சுதந்திரக் கொடியை வானளாவப் பறக்கவிடுகிறது; நேற்றைய தினம் எவர் எள்ளி நகைத்தார்களோ அந்த நாடுகளுக்கு சவால் விடும் முறையில் பறக்க விடுகின்றது. இருண்ட கண்டம் என அழைக்கபபட்ட ஆப்பிரிக்கா கண்டத்தை சுதந்திர விரும்பிகள் கண்ணோட்டத்திலிருந்து மறைக்க முடியாது.

ஆம்! ஆத்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் கொம்புபோல் நீண்டிருக்கும் இரு பிரதேசங்கள் உண்டு. சோமாலிலண்ட் என்றும் சோமாலியா என்றும் அழைக்கிறார்கள்; அழைத்தார்கள்!

ஆப்பிரிக்காவின் 'கொம்பு' எனப்படும் இப்பிரதேசத்தை 1880ல் பிரிட்டன்; பிரான்ஸ்; இதாலி ஆகிய நாடுகள் தமக்குள் பங்கு போடடுக் கொண்டன.

அதாவது; சிறுசிறு சிற்றரசுகளின் கையிலிருந்த இந்தியாவை ஆங்கில ஏகாதிபத்தியம் தட்டிப் பறித்துக் கொண்டதுப்போலாகும். இன்று 'ஏக இந்தியா' என்கிறார்கள் காந்திய சீடர்கள். இதை ஏக இந்தியா என்று உருவாக்கப்பட்டது என்பதை சிந்திக்கவும்.

இப்படி பிரிக்கப்பட்ட சோமாலியாவை; சோமாலிலண்ட்; பிரிட்டிஷ் சோமாலிலண்ட்; பிரஞ்சு சோமாலிலண்ட் என்ற மூன்று பிரிவுகளாக பிரித்தாண்டார்கள்.

சோமாலிகள்—தனி இனத்தவர். புராதன ஹெமிடிக் இனம், என இருவகையினர். இவர்களிடையே 120 கூட்டத்தினர் உள்ளனர். பெரும்பாலான மக்கள் நாடோடிகள். உலக நாடுகளை பிரமிக்க வைத்த இரண்டாம் உலகப்போர் 1935-44ல் மூண்டது. அந்தப் போர் உலக பாகங்களை சின்னாபின்னப் படுத்தியப்போதிலும்; இங்கு அரசியல் ஞானத்தை வாலிப உள்ளங்களில் வளர்த்தது. ஒரு இளைஞர் கழகம் இவர்களிடையே தோன்றி அரும்பெரும் பணிகளை நடாத்தி நாட்டிற்கு நல்லாட்சி வேண்டுமென கேட்டது விந்தை விந்தையே ஆகும். நாட்டை துண்டாட வேண்டுமென வாதாடியது மட்டுமல்ல 'உஸ்மானியர்' எனப்படும் மொழி ஒன்றை உருவாக்கினார்கள்.

இவ்விளைஞர் கழகத்தின் இல[ட்]சியம்; கோட்பாடு; இப்பிரதேசங்க[ள்] அடிமைப்பிடியிலிருந்து நீங்கி ஒன்[று] பட்ட நாடாக விளங்கவேண்டு[ம்] அதாவது "மகா சோமாலியா" என[] அமைக்கப்பட வேண்டும்; மிகவு[ம்] பிற்போக்கான நிலையிலுள்ள இப்[பிர]தேசத்து மக்களை எதிர்நோக்[கும்] ஏராளமான பிரச்சினைகள் உள்ள[ன] என்றெல்லாம் தன் இலட்சியத்தை எடுத்துரைத்தது.

அதாவது; பிரிக்கப்பட்ட தென்னாட்டை; கர்நாடகம், கேரளம், ஆந்திரம், தமிழகம் எனப் பிரிந்துள்ள இந்நாட்டை "திராவிட நாடா"க்க வேண்டும் என விரும்புவதுபோல் அந்நாடு விழைகிறது.

ஆங்கில வல்லரசுகளின் குரங்குப் பிடியிலிருந்து தனித்தியங்க விரும்புகிறது; வடவர்களின் கோரப் பிடியிலிருந்து, டெல்லியின் ஆதிக்கத்திலிருந்து பிரிந்து 'திராவிட நாடாக' விளங்க முயற்சிப்பதுபோல்.

இந்நாடுகள் 1960 ஜூன் திங்கள் 26ந் தேதி இணைந்து "சோமாலியா குடியரசு" என அகில உலகிற்கு பறை சாற்றிற்று.

இச்சிறு பகுதிகளுக்கு 'சுயாட்சி' அதிகாரபூர்வமாக வழங்கி அவை களும் ஒரு நாடு என்று அகில உலக சபையில் கொலு வீற்றிருக்கிறது. ஏழே முக்கால் கோடி ஜனத்தொகையும்; 1800 மைல் கடலரணையும் கொண்ட "வளமார் எமது திராவிடம்" என்று தன்னாட்டுக் கொடியை பறக்கவிடுமோ? விடுதலை இயக்கத்தின் இலட்சியம் என்று தலைநிமிர்ந்து தரணிபுகழப் பவனி வருமோ! அந்நாளும் வெகு விரைவில்!

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.